எதிரொலி

ஆஸ்திரேலியா ETHIROLI

குரல் 07 அதிர்வு 75 புரட்டாதி 2023 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

விடியலை நோக்கிய நடை

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்

'டன்டினோங்' இல் புதியதோர் சேவை

BOC · PEOPLE'S BANK · COMMERCIAL BANK · HNB

සම්පත් බැංකුව சம்பத் வங்கி Sampath Bank · UNION BANK · Amãna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403

royalinfomoney@gmail.com

KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.

SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

சிறை செல்வாரா டிரம்ப்?

கைதி எண் P01135809 - இப்படித்தான் அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் தற்போது அமெரிக்கக் குற்ற ஆவணங்களில் குறிப்பிடப்படுகிறார் . 2020 ல் நடந்த அதிபர் தேர்தலின் முடிவுகளை சட்டத்துக்குப் புறம்பான வகையில் மாற்ற முயன்றதாக தொடுக்கப்பட்ட வழக்கில் அவர் தற்போது குற்றம் சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வகையில் தேர்தல் முடிவுகளை மாற்ற முயல்வது அமெரிக்காவில் கிரிமினல் குற்றமாகக் கருதப்படுகிறது. இந்த வழக்கில் டிரம்ப் மட்டுமல்லாமல் இதில் அவருக்கு உடந்தையாக இருந்த 18 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கும் சட்டம் (RICO Act) பொதுவாக மாஃபியா போன்ற கிரிமினல் குற்றக்குழுக்களை கைது செய்ய பயன்படுத்தப்படுவது.

சில சமயம் பெரிய குற்றங்கள் பலரால் கூட்டாகச் செய்யப்படும்போது ஒவ்வொருவரின் தனிப்பட்ட செயல்களை நோக்குகையில் அவை சிறிய குற்றங்களாக இருக்கும். ஆனால் ஒட்டுமொத்தமாக நோக்குகையில் அவை பெரிய ஒரு குற்றத்துக்கு துணைபுரிபவை என்பது புலப்படும், இவ்வகை குழுக்குற்றங்களை (Racketeering) தண்டிப்பதற்கென்றே இந்த ரிக்கோ சட்டம் உருவாக்கப்பட்டது, இந்த குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஒருவரை குறைந்தது ஐந்து முதல் 20 ஆண்டுகள் சிறையில் அடைக்க முடியும். எனவே இந்த வழக்கு டிரம்ப் தரப்பில் மிகுந்த கவனத்துடன் அணுகப்படுகிறது,

இந்த வழக்குத் தொடர்பாக டிரம்ப் தானாகவே வந்து சரணடைந்தமையே, இந்த வழக்கு எவ்வளவு கடுமையானது என்பதை உணர்த்தப் போதுமானது. அமெரிக்காவில் கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டவர்களை காவல்நிலையம் அல்லது சிறைச்சாலைக்கு கொண்டு வந்து அவர்களின் புகைப்படம் (mug shot), கைரேகை என்று அங்க அடையாளங்களை அதிகாரபூர்வமாக பதிவு செய்வார்கள்.

இதற்கு முன் வேறு சில வழக்குகளிலும் டிரம்ப் குற்றம் சாட்டப்பட்டுள்ளார், ஆனால் இதுவரை இந்த mug shot நடைமுறைக்கு அவர் உட்படுத்தப்பட்டதில்லை. ஆனால் ஜியார்ஜியா மாநிலத்தில் நடந்த இந்த வழக்கில் அவரை எல்லா கிரிமினல் குற்றவாளிகளையும் போல சிறைச்சாலைக்கு வரவழைத்து அவரின் அங்க அடையாளங்களைப் பதிவு செய்திருக்கிறார்கள் .இந்நிகழ்வு பல காரணங்களுக்காக உலகெங்கும் பெரும் கவனத்தைப் பெற்றுள்ளது,

முன்னாள் அமெரிக்க அதிபர் என்ற நோக்கில் இன்னும் டிரம்புக்கு அமெரிக்க அரசு பாதுகாப்பு வசதிகளை வழங்குகிறது. இப்படி ஒரு முன்னாள் அதிபர் தனது பிரத்தியேக விமானத்தில் வந்து இறங்கி, பாதுகாப்புப் படையினர் சூழ உள்ளூர் சிறைச்சாலைக்குப் போய் சரணடைவதென்பது ஒரு புனை கதைக்கு ஒப்பான நிகழ்வு . அப்படி சிறைச்சாலைக்குப் நேரில் சென்று சரணடைந்து, அங்க அடையாளங்கள் பதியப்பட்டு பின்னர் பிணைத் தொகையாக 2 லட்சம் டொலர் செலுத்திவிட்டு, மீண்டும் தனது தனி விமானத்தில் ஏறி டிரம்ப் திரும்பிச் செல்வது அமெரிக்காவில் மட்டுமே நடக்கும் சாத்தியம் உள்ள surreal காட்சி .

டிரம்பின் இந்தக் கைது ஜனநாயகப் பாரம்பரியமும், அறமற்ற அதிகார விளைவும் ,தனி மனித சுதந்திரமும், நீதி பரிபாலனமும், முதலாளித்துவமும் என்று பல முரண் விசைகள் முயங்கும் விசித்திரமான புள்ளி. அமெரிக்காவுக்கே தனித்துவமான ஒரு நிகழ்வு.

சுதந்திரமான தேர்தலை நடத்த வேண்டும் என்பது ஜனநாயகத்துக்கான அடிப்படை நிபந்தனைகளில் ஒன்று. எனவே இந்தக் குற்றம் ஏன் இவ்வளவு தீவிரமான ஒன்றாக பார்க்கப்படுகிறது என்பது புரிந்துகொள்ளக்கூடியதே.

இப்படி கைது செய்யப்பட்டவர் அடுத்து அதிபர் தேர்தலில் ரிபப்ளிகன் கட்சி சார்பாக முன்வைக்கப்படும் முதன்மை வேட்பாளரும் கூட என்பதை நாம் மறந்துவிடலாகாது. ஒரு வேளை டிரம்ப் இந்த வழக்கில் குற்றம் உறுதி செய்யப்பட்டு சிறைக்குச் சென்றாலும் அவர் அங்கிருந்தே தேர்தலில் பங்குபெற முடியும் ,இதை அமெரிக்கச் சட்டங்கள் அனுமதிக்கின்றன .ஒருவேளை அவர் சிறையில் இருந்து கொண்டே வெற்றி பெற்றுவிட்டால் அடுத்து என்ன நடக்கும் என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது.

டிரம்ப் தன் மேல் இருக்கும் பிற வழக்குகளில் இருந்து தன்னைத்தானே ஒரு அதிபர் என்ற முறையில் மன்னித்துக்கொள்ள முடியும் . ஆனால் ஜியார்ஜியாவில், அவர் தற்போது கைதுசெய்யப்பட்ட வழக்கில் அவரால் அப்படி செய்ய முடியாது. அது மாநிலங்களின் அதிகாரத்துக்கு உட்பட்டு நடக்கும் வழக்கு .

இது போன்ற தேர்தல் முடிவுகளை மாற்றுவதற்கான முயற்சி மொத்தம் ஏழு மாநிலங்களில் நடந்துள்ளது, ரிபப்ளிகன் கட்சியைச் சார்ந்த போலி வாக்காளர்கள் (electors) தத்தமது மாநிலங்களில் டிரம்ப் வென்று விட்டதாக பொய்ச்சான்றிதழ்களை வழங்கியுள்ளனர். இப்படி போலியான சான்றிதழ்களை கொண்டு எப்படியாவது துணை அதிபரை ஒட்டுமொத்தமாக தேர்தலில் டிரம்ப் வென்றதாகச் சான்றளிக்க நிர்ப்பந்தித்துள்ளனர்.

வரும் நாட்களில் இந்த மாநிலங்களும் தனித்தனியாக இது தொடர்பாக வழக்குத் தொடுக்கும் சாத்தியம் உள்ளது . ஏற்கனவே டெக்ஸாஸ் மற்றும் மிச்சிகன் மாநிலங்கள் இது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்க துவங்கியுள்ளன .

டிரம்ப் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் இருந்தாலும், அவர் முன்னாள் அதிபர் என்பதால் இந்த வழக்குகள் எல்லாம் பல்வேறு சட்டச்சிக்கல்களால் துரிதமாக நகர முடியாமல் மெதுவாகவே நகர்ந்து கொண்டிருந்தன. ஜியார்ஜியா வழக்கில் நிகழ்ந்த கைது ஒருவகையில் அமெரிக்கா தன்னைத்தானே அராஜகத்தின் பிடியில் இருந்து விடுவித்துக்கொள்ளும் முயற்சியாகப் பார்க்கப்படுகின்றது .

அமெரிக்க அரசியல் சாசனம் காக்கப்படுமானால் அமெரிக்கா காக்கப்படும் , ஜனநாயகம் காக்கப்படும்.

***

இந்தியா போன்ற நாடுகளுக்கும் இந்த கைது நிகழ்வில் ஒரு செய்தி உள்ளது.சில நாட்களுக்கு முன்னர் தான் இந்திய நாடாளுமன்றத்தில், தேர்தல் ஆணையரை நியமிக்கும் குழுவில் இருந்து உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி நீக்கப்படுவது குறித்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இது குறித்து என் அச்சங்களை அப்போது எழுதியிருந்தேன். இந்த மசோதா சட்டமானால், கண்டிப்பாக இந்த வழக்கு உச்சநீதி மன்றம் போகும் , இது அரசியல் சாசனத்துக்குப் புறம்பானது என்று தீர்ப்பாகும் . ஆனால் வழக்கு நடந்து தீர்ப்பு வருவதற்குள் 2024 பொதுத்தேர்தல் நடந்து முடிந்திருக்கும். இப்படி அரசியல் சாசனத்துக்கு புறம்பாகச் செல்லும் எந்த அரசும் இறுதியில் மக்களுக்கு எதிராகவே திரும்பும் - இதைத்தான் நாம் வரலாற்றில் மீண்டும் மீண்டும் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

இதைல்லாம் தனிப்பட்ட கட்சிகள் மீதான அல்லது தனிநபர்கள் மீதான விமர்சனமாகப் பார்க்கக்கூடாது. டிரம்பை இதை விடத் தீவிரமாக விமர்சித்து தொடர்ந்து எழுதியிருக்கிறேன் . புடினை எழுதியிருக்கிறேன். நாளை இஸ்ரேல் அதிபர் நெத்தன்யாஹூவின் ஜனநாயக எதிர்ப்புப் போக்குக் குறித்தும் எழுதுவேன். இங்கு ஜனநாயகம் என்பது நமக்கு நாமே விதித்துக்கொண்ட நற்கட்டளை , அதைச் சிதைய விடுவோமானால் , அது நம்மை இட்டுச்செல்லும் ஆழிருட்டில் இருந்து நம்மால் எழுந்துவரவே முடியாது.

Sai Shree Foods
Pty. Ltd.

AUSTRALIA - CANADA - INDIA

REMARKABLE QUALITY AND RELISHING TASTE.

If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

HEAD OFFICE: Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

DISTRIBUTORS: Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
குரல்:07 அதிர்வு: 75 புரட்டாதி 2023 தொ.பே:1800 960 162

சர்வஜன வாக்கெடுப்பு வெற்றிபெறட்டும்!

ஆஸ்திரேலியாவில் பூர்வகுடி மக்களுக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கு மக்கள் ஆணைகோரும் வரலாற்று முக்கியத்துவமிக்க சர்வஜன வாக்கெடுப்புக்கு நாள் குறிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த வாக்கெடுப்பு தொடர்பிலேயே ஆஸ்திரேலியாவில் தற்போது அதிகம் பேசப்படுகின்றது.

“YES”, “NO” என்ற இருமுனை பரப்புரையால் அரசியல் களமும் சூடுபிடித்துள்ளது. சுமார் 24 வருடங்களுக்கு பிறகு சர்வஜன வாக்கெடுப்பொன்று எதிர்வரும் ஒக்ரோபர் 14 ஆம் திகதி நடத்தப்படவுள்ளதால் அதனை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கான வேலைத்திட்டங்களை தேர்தல் ஆணைக்குழுவும் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது.

ஆஸ்திரேலியாவை குடியரசாக்குவது தொடர்பில் கடைசியாக 1999 இல் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் 11,785,000 பேர் வாக்களித்தனர். 0.86 வீத வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. செல்லுடியான 99.14 வீத வாக்குகளில் 54.87 வீதமானோர் மே எனவும், 45.13 வீதமானோர் லுநுளு எனவும் வாக்களித்தனர். இதன்படி குறித்த சர்வஜன வாக்கெடுப்பு தோல்வியில் முடிந்தது.

இம்முறை பூர்வகுடி மக்களுக்கான நாடாளுமன்றப் பிரதிநிதித்”துவம் மற்றும் அமைப்பு தொடர்பில் மக்களிடம் கருத்து கோரப்படுகின்றது. சர்வஜன வாக்கெடுப்பு வெற்றியளிக்க வேண்டுமெனில் செல்லுபடியான மொத்த வாக்குகளில் 50 வீதத்”துக்கு மேல் லுநுளு என இருத்தல் வேண்டும். அதேபோல ஆஸ்திரேலியாவில் உள்ள ஆறு மாநிலங்களில் நான்கு மாநிலங்களின் ஆதரவும் அவசியம்.

குறித்த சர்வஜன வாக்கெடுப்பு வெற்றிபெற்று அது அரசமைப்புக்குள் உள்வாங்கப்பட்டால், பூர்வகுடி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நிரந்தரக் குழு நிறுவப்பட்டு, அந்தக்குழு பூர்வீக குடிகளைப் பாதிக்கும் நாட்டின் கொள்கைகளை ஆராய்ந்து – அவை தொடர்பில் அரசுக்கு அறிவுரை வழங்கும். ஆனால் நாடாளுமன்றம் தமக்கு இணங்காத கொள்கைகளை நிறைவேற்றுவதைத் தடுக்கும் அதிகாரம் இந்தக்குழுவுக்கு கிடையாது. சிலவேளை வாக்கெடுப்பு தோல்வியடையும் பட்சத்தில் அந்த முயற்சி கிடப்பில் போடப்படும்.

ஆஸ்திரேலிய வரலாற்றில் இதுவரை 44 சர்வஜன வாக்கெடுப்புகள் நடத்தப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 8 வாக்கெடுப்புகள் மட்டுமே வெற்றிபெற்றுள்ளன. வெற்றி பெற்ற வாக்கெடுப்புகளுக்கு பிரதான கட்சிகளின் ஆதரவும் இருந்தன. குரல் வாக்கெடுப்பை பிரதான எதிர்க்கட்சியான லிபரல் கட்சி கடுமையாக எதிர்த்துள்ளது. மே பிரசாரத்திலும் தீவிரம் காட்டிவருகின்றது. எனவே, இந்த வாக்கெடுப்பு வெற்றிபெறுமா என்ற கேள்வியும் மேலோங்கியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் மே என வாக்களிப்பவர்களின் எண்ணிக்கையே அதிகமென உத்தியோகப்பூர்வமற்ற கருத்துக் கணிப்புகள் தெரிவித்தாலும், இறுதி மூன்று வாரங்களே தீர்க்கமானவை. பிரசார யுக்திகளை அடிப்படையாகக் கொண்டு இறுதிநேரத்தில்கூட முடிவுகள் மாறக்கூடும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஆஸ்திரேலியப் பிரஜைகளுடன் ஒப்பிடுகையில் பூர்வகுடி மக்களின் ஆயுட்காலம், கல்வி, சுகாதாரம், சமூக கட்டமைப்பு, வீட்டுவசதி போன்றவை பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. அவர்கள் மீதான புறக்கணிப்புகள் தொடர்கின்றன. ஏதோவொரு விதத்தில் அவர்கள் சுரண்டப்படுகின்றனர். எனவே, அவர்களுக்கு அரசமைப்பு ரீதியில் அங்கீகாரம், அதிஉயர் சபையில் குரல் ஒலிப்பது என்பன காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

லேபர் அரசு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பூர்வகுடி மக்கள் பற்றி உறுதியளித்திருந்தது. அதற்கு மக்கள் ஆணை வழங்கப்பட்டது. எனவே, சர்வஜன வாக்கெடுப்பை ஆதரிக்க வேண்டியது மக்களின் பொறுப்பாகும்.

சர்வஜன வாக்கெடுப்பு வெற்றிபெற்றால் அது தமக்கு அரசியல் ரீதியில் பின்னடைவாக அமையும் என்பதாலும், தோல்வி அடைந்தால் அதன்மூலம் முன்னோக்கி நகரலாம் எனவும் லிபரல் கட்சி திட்டம்போட்டுள்ளது. அந்தக்கட்சியினர் “மே” பிரசாரத்தில் இறங்குவதற்கான காரணிகளுள் இதுவும் பிரதானமானது. தேச நலனுடன் தொடர்புபட்ட விடயங்களின்போது தமது பொறுப்பை – கடப்பாட்டை மறந்து எதிர்க்கட்சிகள் அரசியல் செய்வது ஏற்புடைய நடவடிக்கையாக அமையாது. சர்வஜன வாக்கெடுப்பு தோல்வி அடைந்தால் அது உலக அரங்கிலும் ஆஸ்திரேலியாவுக்கு அவமானமாக அமையும், எனவே, இறுதி நொடியிலாவது தமது திட்டத்தைக் கைவிட்டு, சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டை லிபரல் கட்சியும், வாக்கெடுப்பை எதிர்க்கும் ஏனையோரும் முன்னெடுக்க வேண்டும்.

விடியலை நோக்கிய நடை

ஆஸ்திரேலியாவில் அகதிகளுக்கான போராட்டங்கள் பல்வேறு வழிகளில், அடிக்கடி நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. இந்தப் போராட்டங்களின் வழியே ஒரு சில அகதிகள் நிரந்தர வதிவுடமை பெற்றிருக்கின்றனர். அண்மையில் கூட தாயை விட்டு மகனை நாடுகடத்துவதற்கான திட்டத்தை குடிவரவு திணைக்களம் நடைமுறைப்படுத்த முயன்றபோது, மக்களின் போராட்டம் - சட்ட போராட்டங்களுக்கமைவாக அது தற்காலிகமாக தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றது. குறிப்பாக ஈழத்தமிழ் அகதிகளே இவ்வாறான இடர்பாடுகளுக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

அகதிகளின் மீதான கோரத்தை வெளிக்காட்டி ஆட்சி பீடமேறி மூன்று முறை ஆட்சி செய்த லிபரல் ஆட்சியில் அதிவேக அகதிக்கோரிக்கை விசா நடை முறையில் பல அகதிகளின் விசா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அத்தகைய 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டு, ஆஸ்திரேலிய நிலப்பரப்பில் ஆங்காங்கே நிரந்தரமற்று வாழ்கின்றனர்.

அவ்வாறானவர்கள் நிரந்தரமாக வாழ வழிசமைக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு Ballarat, VIC இலிருந்து ஆஸ்திரேலியப் பிரதமரின் தேர்தல் தொகுதியான – Marrickville, NSW வரை - சுமார் 1000 கிலோ மீற்றர் “சுதந்திர வாழ்வுக்கான நடை” என்ற தொனிப்பொருளில் விடியலை நோக்கி நடந்து கொண்டிருக்கிறார் நீலவண்ணன் என்னும் நீல் பரா.

Marrickville, NSW யில் உள்ள ஆஸ்திரேலிய பிரதமர் அல்பனிஸ் அவர்களின் தேர்தல் தொகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் கோரிக்கை மனுவும் கையளிக்கப்பட வுள்ளது.

“இங்கு பிறந்து 10 வயதாகிய பின்னர் பிரஜாவுரிமை வழங்கப்பட்ட பிள்ளைகளுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும், இந்த நாட்டில் அகதிகளாக வந்து பாடசாலை செல்லும் - சென்ற - பிள்ளைகளுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும். அதை மறுக்கும் பட்சத்தில் நிரந்தரவதிவடமை ஊடாக பிரஜாவுரிமை பெறக்கூடிய வகை செய்ய வேண்டும். நிர்க்கதியான அகதிகளுக்கு நிரந்தரவதிவுடமை வழங்க வேண்டும்.(விசா மறுக்கப்பட்ட - முடிவுகளற்ற அனைவருக்கும்)” என்ற கோரிக்கைகளடங்கிய நோக்கோடே இந்த சுதந்திரத்துக்கான நடையைத் திட்டமிட்டேன் என்று கூறுகிறார் நீல் பரா.

“சுதந்திரத்துக்கான நடை நன்றாகத் திட்டமிடப்பட்டு ஆம்பிக்கப்பட்டது. இந்த வருட முற்பகுதியில் ஆதாவது மார்ச் மாதம் கன்பராவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது நான் ஒரு முடிவெடுத்தேன். சத்தம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்வது அல்லது அரசியல்வாதிகளின் அலுவலகங்களுக்கு முன்னால் கண்ணாடிகளில் எழுதுவது போன்ற போராட்டங்களில் எனக்கு உடன்பாடு இல்லை. எங்களுடைய குரல் அடுத்தவர்களை திரும்பி பார்க்க வைக்கும் வகையில் அமைய வேண்டும். இந்த அடிப்படையில் Union of Australian refuges என்ற அமைப்பை உருவாக்கினேன். இதன் ஊடாகத் தான் இந்த நடை பயணத்தை ஆரம்பித்தேன்.

ஆரம்பிக்கும் போது இடைவழியில் கூடாரம் அமைத்தே தங்குவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் எதிர் பார்க்காதளவுக்கு திருப்பங்கள் நிறையவே இருந்தன. நான் தங்கும் இடங்களில் பல ஆஸ்திரேலியர்கள் பலர் தங்களது கதவுகளைத் திறந்து என்னைத் தங்க அனுமதித்து உணவும் பரிமாறுகின்றனர். அதுமட்டுமின்றி இடையிடையே காணப்படும் நகராட்சி மன்ற உறுப்பினர்களும் தங்களது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். எங்களுடைய பிரச்சினைகள் மக்களிடம் போய் சேர்கின்றன என்பதே எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

நான் நடைபயணத்தை ஆரம்பித்த இரண்டாம் நாள் என்னால் நடக்கக் கடினமாக இருந்தது. கால்களில் கொப்பளங்கள் போட ஆரம்பித்து விட்டன. மூன்றாம் நாள் நடக்கவே முடியவில்லை. ஆனாலும் எனக்குள் இருந்த குறிக்கோள் அதாவது நிரந்தர வாழ்வியலை நோக்கிய நடை என்பது என்னை இன்று வரை துவளவிடாமல் என்னை நடக்கச் செய்துகொண்டிருக்கிறது. இடையிடையே பல மக்கள் என்னுடன் சேர்ந்து நடக்கிறார்கள். மக்களிடையே எமது குரல் சென்றடைகின்றது. இவை எல்லாமே என்னைச் சோர்வுகளிலிருந்து தட்டியெழுப்பி முன்னோக்கி நடக்க வைக்கின்றன.

இவ்வாறு நான் எப்போதும் நடந்தவனல்லன். ஆஸ்திரேலியாவின் மாநிலங்களை இணைக்கும் பாதைகளில் கனகர வாகனங்களின் இரைச்சல், குளிர்கால காற்றின் வேகம், வாகனங்களில் அடிபட்டு கிடக்கும் மிருகங்களின் சிதைவுகளிலிருந்து வரும் நாற்றக்காற்று என்பன என் மனவுறுதியை அவ்வப்போது அசைக்கத்தான் செய்கின்றன. ஆனால் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது என் கரங்களைப் பற்றிக்கொள்ள பல அகதிகள், குறிப்பாக ஈரானிய அகதிகள் என்னோடு வருகின்றனர். இருப்பினும் தமிழ் அகதிகள் யாருமே இதுவரை வரவில்லைதமிழ் அமைப்புகளும் வரவில்லை என்பது மனவருத்தமான விடயம். ” - என்று தெரிவித்தார் நீல்.

இதேவேளை ஆயிரம் கிலோ மீற்றர் நடைபயணத்தை ஆரம்பிக்க யோசித்த போது பலர் சொன்னார்கள் ’இது தேவையற்றது. உங்களுடைய பிரச்சினைகள் குறித்து அமைச்சருக்கு எழுதினாலே போதும் ,நிரந்தர விசா கிடைக்கும்.’ என்று. ஆனால் நான் அனைவருக்குமான விடியலுக்காகப் போராடுகிறேன். போராட்டங்களின் வடிவங்களில் மாறுதல் வேண்டும்: இந்தப்போராட்டம் வெற்றி பெறலாம் ,தோற்கலாம். ஆனால் மக்களின் மனங்களில் போராட்டத்தை சேர்ப்பதன் மூலமே தீர்வைப் பெறலாம்’ என்று நம்பிக்கையோடு சொல்கிறார் நீல வண்ணன்.

வாசகர் களம்

எரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி

editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

ஒற்றைச் சொல்லுக்காக காத்திருத்தல்

சியாமளா

சொந்த மண்ணில் தம் குரலும் ஒலிக்க வேண்டுமே என்ற ஏக்கத்துடன் மக்களின் வாக்குக்காகக் காத்திருக்க வேண்டிய அவலநிலை அவுஸ்திரேலிய நாட்டின் பழங்குடியினருக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஒருபக்கம் மானிடம் முன்னேறி விட்டது, மனிதம் உயிர்த்தெழுந்து கொண்டிருக்கின்றது என்று உலக சமுதாயம் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கின்றது. தம் பூகோள நலன்களுக்காகவும் அரசியல் காரணங்களுக்காகவும் சில நாடுகளில் நடக்கும் அத்துமீறல்களையும், மனித உரிமை மீறல்களையும் தெரியாது என்பது போன்று நடிப்பது வளர்ந்து விட்ட நாடுகளுக்கு ஒன்றும் புதிதல்ல.

இந்த ஆண்டின் பிற்பகுதியில் "ஆம்" அதாவது "YES" என்ற ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. பழங்குடியினருக்கு பெறுமதியான ஒன்றைக் கொடுத்து விடப்போவதாகப் பலரும் பதறித் துடிப்பது போன்று, இந்த வாக்கெடுப்பொன்றும் பெரிதாக எதனையும் அள்ளிக் கொடுத்துவிடப் போவதில்லை. ஒரு நாட்டுக்குச் சொந்தமானவர்களிடம் அனுமதி பெறாமல் அத்துமீறி நுழைந்து, அந்த இனத்தை ஒடுக்கி, அவர்களின் உரிமையை நசுக்கி விட்டவர்கள் இன்று ஒன்றுமில்லாத ஒன்றைக் கொடுத்து விடப்போவதாகப் பாவனை காட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அதையும் சும்மா கொடுக்காமல் மனித உரிமைகளுக்கு மதிப்புக் கொடுப்பவர்களாக, குடிமக்கள் என்ன சொல்கின்றார்கள் என்றறிய வாக்கெடுப்பு வேறு நடத்தப் போகின்றார்களாம்.

அவுஸ்திரேலியா என்ற ஒரு கண்டம் இருப்பதே உலகத்துக்குத் தெரியாத ஒரு காலத்தில், யாருடைய தலையீடும் இன்றி தம் மொழி, தம் கலாசாரம் என்று பழங்குடியினர் அமைதியாக வாழ்ந்திருந்தனர். அவர்களின் வாழ்க்கைமுறை இயற்கையோடு பின்னிப் பிணைந்திருந்தது. இயற்கையின் இரகசியங்களை அறிந்து அதைப் போற்றிப் பாதுகாத்து, அதனோடு இயைந்து வாழும் ஒரு சமூகமாகவே அவர்கள் காணப்பட்டனர். என்றைக்கு இம்மண்ணில் குடியேற்றம் நடந்ததோ, அன்றைக்கே தம் சுயத்தையும் தமக்கான அடையாளத்தையும் தொலைத்து விட்டு நிற்கின்றார்கள். கலாசாரச் செறிவு கொண்டவர்களாக, சூழல் பற்றிய அறிவு கொண்டு அதனைப் போற்றி வாழ்ந்த ஒரு இனம், இன்று நெரிக்கப்பட்ட குரல்வளைக்குள்ளால் தம் குரல் கேட்க வேண்டும் என்று அனுமதி கேட்டு நிற்கின்றது.

2023 ஆம் ஆண்டின் பெரும் பேசுபொருளாக இருப்பது "YES" என்ற அந்த வார்த்தையே. இந்தச் சொல்லைக் கேட்கும் போதே ஒரு நேர்மறையான எண்ணம் தானே எம்மனதில் உருவாகின்றது? பெரிதும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒன்றுக்கு "YES" என்ற வார்த்தை பதிலாகக் கிடைத்து விட்டால் எத்தனை ஆனந்தப்படுகின்றோம்? அப்படித்தான் அவுஸ்திரேலிய நாட்டின் தொல் குடியினரான பழங்குடியினர் இன்று காத்திருக்கின்றார்கள். அந்த வார்த்தையின் அங்கீகரிப்புடன் தம் போராட்டத்துக்கான வெற்றிப்பாதை தொடங்கி விடாதா என்பதே அவர்களின் ஏக்கம். சொந்த நாட்டில், அவர்களின் சொந்த மண்ணில் உரிமையாளர்களின் குரல் கேட்கப்படவேண்டுமா இல்லையா என்பதை வந்தேறு குடிகள் தீர்மானிக்க வேண்டும் என்பதே கேலிக்கூத்தான விடயமாக இருக்கின்றது.

இந்த "YES" என்பது தான் என்ன? "Voice" என்ற குழு, பூர்வ குடியினரால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு நாடாளுமன்றத்தில் இடம் பெற்றிருக்கும். இனிவரும் காலங்களில் இயற்றப்படும் அரசியலமைப்புச் சட்டங்களும், கொள்கைகளும் பழங்குடியின மக்களுக்கு எந்த விதத்திலாவது பாதிப்பை ஏற்படுத்துமா என்பது பற்றி பழங்குடியினரின் பிரதிநிதிகளிடம் கருத்துக் கேட்கப்பட வேண்டுமா ,இல்லையா என்பது பற்றி அவுஸ்திரேலியக் குடியுரிமை கொண்ட மக்கள் வாக்களிக்கப் போகின்றார்கள். அவ்வளவுதான்.

அந்தக் குழு தம்மைப் பாதிக்கும் என்று சொன்னால் கூட அவர்களின் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டுத் தான் ஆக வேண்டும் என்று எவ்வித நிர்ப்பந்தமும் அரசுக்கு இருக்கப் போவதில்லை என்பது வேறு கதை. ஆனால் அந்தக் குரல் ஒலிக்க வேண்டுமா என்பது பற்றி வாக்காளர்கள் தீர்மானிக்க வேண்டுமாம். இங்கு குடியுரிமை பெற்று வாக்குரிமை உடையவர்களில் முப்பது சதவீதமானோர் பொருளாதார முன்னேற்றம் கருதியோ அல்லது புகலிடம் தேடியோ அடைக்கலம் பெற்றவர்கள் தான். அவர்களில் எத்தனை பேருக்கு இம்மண்ணின் தொன்மையும், வரலாறும், பூர்வ குடியினரின் போராட்டமும் தெரிந்திருக்கும் என்பது கேள்விக்குறியே. ஆனால் மனிதாபிமானம் கொண்ட எவரும் அந்த அடிப்படை உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதால் "YES" என்பதாகவே வாக்களிப்பார்கள்.

உரிமை கொண்ட மண்ணுக்கு உரித்தில்லாதவர்களாய், எல்லைகள் வரையறுக்கப்பட்ட இடத்துக்குள் அடைக்கப் பட்டவர்களாய் இன்னும் தம் அடிப்படை உரிமைக்காய் போராடுபவர்களின் குரல் இனியாவது கேட்கப்பட்டே தான் ஆக வேண்டும். 'இல்லை' என்று வாக்களிப்பவர்கள் எல்லோரும் பழங்குடியினருக்கு எதிரானவர்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் இல்லை என்று வாக்களிப்பவர்களில் பழங்குடி மக்களின் உரிமையைப் புறக்கணிப்பவர்கள் இருக்கப் போகிறார்கள். "YES" என்ற ஒற்றை வார்த்தை ஒரு இனத்தின் உரிமைகளைப் பெற்றெடுத்துக் கொடுப்பதற்கான ஒரு சிறிய அங்கீகாரமாக இருக்கப்போகிறது. இதன் மூலம் பழங்குடியின மூத்தோர்களின் தியாகத்துக்கும் ஒரு அர்த்தம் கிடைக்கும் என்பதை அவுஸ்திரேலியப் பிரசைகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பிரித்தானிய ஆங்கிலேயர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட இத்தேசம் படிப்படியாக அவர்களின் காலனித்துவ நாடாக மாற்றப்பட்டது. கப்டன் குக்கால் அவுஸ்திரேலியா கண்டுபிடிக்கப்பட்டதாக வரலாற்றை எழுதி வருங்காலச் சந்ததியினருக்குக் கற்பிக்கின்றார்கள். ஆனால் அதற்கு முன்னரே இம்மண்ணின் குடிமக்கள் பன்மொழி பேசி, ஒற்றுமையாய் வாழ்ந்த கதை இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டது. கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இல்லாமலேயே இங்கு ஒரு இனத்தினர் வாழ்ந்திருந்த வரலாறு மறைக்கப்பட்டு விட்டது. ஈழத்தமிழரைப் போலவே பழங்குடியினருக்கும் காணாமல் ஆக்கப்பட்டோரும், படுகொலை செய்யப்பட்டோரும், திட்டமிட்டே ஒரு சந்ததியைத் தொலைத்து விட்டதுமான வரலாறு ஒரே விதமாய் தான் உள்ளது. ஈழத்தமிழரின் வரலாறும் அதுவே தானென்பதால் பூர்வகுடிகளின் வலியை எம்மால் புரிந்து கொள்ளக் கூடியதாய் உள்ளது. இம்மண்ணின் வரலாறு சரியாகச் சரித்திரத்தில் பதியப்பட வேண்டும் என்பதையே இக்குடியின் மூத்தோர் விரும்புகிறார்கள்.

நிகழ்வுகளை ஆரம்பிக்கும் போது வெறும் வார்த்தைகளில் அவர்களுக்கு நன்றி சொல்வதுடன் நின்று விடாமல், அதைச் செயற்படுத்தவும் நாம் முன்வர வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 51, 26ஆம் கோர்வையின் படி பூர்வகுடியினரைத் தவிர்ந்த மற்றைய எல்லோருக்கும் சட்டமியற்றுவதற்கான உரிமையை 'கொமன்வெல்த்துக்கு' நாடாளுமன்றம் கொடுத்திருக்கின்றது. மேம்போக்காக இந்தச் சட்டம் பூர்வகுடியினருக்குச் சாதகமானது போன்று தோன்றினாலும், பூர்வகுடியினர் என்று வரும்போது சட்டவிதியை மீறி தீர்ப்புச் சொல்லும் அதிகாரம் அரசிடம் இருக்கின்றது என்பது தான் உண்மை. அது மட்டுமன்றி ஒரு மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத்துக்குச் செல்லும் போது அவர்களின் சட்டரீதியான இருப்பும் மாறி விடுகின்றது. அதாவது எல்லோருக்கும் பொதுவான சட்டம் என்றில்லாத ஒரு நிலையே இங்கு காணப்படுகின்றது.

வழக்கொழிந்து போகும் பழங்குடியினருக்கேயான சட்டங்கள், பாரம்பரியமாய் வந்த வழக்கங்கள், இசை, ஓவியம் என்பவற்றுக்கு புத்துயிர் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எல்லாப்பிள்ளைகளுக்கும் கிடைப்பது போன்ற கல்வி அவர்களுக்குக் கிடைக்க முன்னர், பழங்குடியினச் சிறுவர்களில் சிறப்புக்கவனம் செலுத்தப்பட்டு அவர்கள் முன்னேற்றப்படவேண்டும். அப்போது தான் போட்டிப்பரீட்சைகளில் அவர்கள் வெற்றி பெற முடியும். இவையெல்லாவற்றையும் அந்த மூத்த குடிகளுக்குச் செய்ய வேண்டிய கடப்பாடு அரசுக்கு மட்டுமல்லாமல், மக்களுக்கும் இருக்கின்றது என்பதை நாம் மறக்கவோ மறுக்கவோ கூடாது.

செனட்டுக்கான எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாக ஒரு முரண்பாடான விடயத்துக்கு வாக்களிப்பதனையும் இந்த "ஆம்" வாக்கெடுப்புடன் சேர்த்ததன் மூலம் மக்கள் குழப்பப்பட்டு விடக் கூடும் என்றொரு அச்சம் மூத்த குடிகளிடம் நிலவுவதையும் மறுக்க முடியாது.

தமது மண்ணில் மறுக்கப்பட்ட உரிமைக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் பூர்வகுடிகளின் இந்தப் போராட்டத்துக்குக் கிடைக்கப் போகும் பதில் என்ன என்பது இவ்வருட இறுதிக்குள் தெரிந்து விடும். சரியான தீர்ப்புக் கிடைக்கும் வரை, பாதிக்கப்பட்ட இனங்களின் குமுறல்களும் போராட்டங்களும் தொடர்ந்த வண்ணம் தான் இருக்கும் .

தமிழ் இனத்தை வழிப்படுத்துவதற்கு எங்களிடம் இன்று ஒரு தேசியத் தலைமை இல்லை!

உலகம் இன்று எதிர்நோக்கும் மிகப்பெரும் பயங்கரவாதம் காலநிலை மாற்றம் என்னும் சூழலியற் பயங்கரம்தான்

நேர்கண்டவர் : கருணாகரன்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரான பொ. ஐங்கரநேசன் தாவரவியல்துறையில் படித்துப் பட்டம் பெற்றவர். இந்தியாவில் ஊடகத்துறையில் கற்று, அதில் செயற்பட்டிருக்கிறார். 1990களில் "நங்கூரம்" என்ற இளையோருக்கான அறிவியல் இதழின் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் இருந்தார். தமிழ்த் தேசிய அரசியற் பற்றாளரான ஐங்கரநேசன், 2013இல் வடமாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டினார். தொடர்ந்து வடமாகாண சபையின் விவசாய அமைச்சராகவும் பதவி வகித்திருக்கிறார்.

சூழலியல்துறையில் ஆர்வமும் ஈடுபாடும் உள்ள ஐங்கரநேசன், அந்தத் துறைசார்ந்த நூல்களையும் எழுதியுள்ளார். பல ஆளுமைகளை நேர்காணல் செய்திருக்கிறார். தொடர்ந்து மரநடுகை இயக்கத்தையும் நடத்தி வருகிறார். தமிழ்த்தேசிய அரசியலை மேற்கொண்டு வரும் அரசியல்வாதிகளில் அறிவுபூர்வமாகச் சிந்திக்கக் கூடியவர்களில் ஒருவராக இருக்கும் ஐங்கரநேசனுடன் எதிரொலிக்காக உரையாடிய போது...

கேள்வி: இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வரும் முயற்சிகளைப் பற்றிய உங்கள் அவதானமும் நிலைப்பாடும் என்ன?

பதில்: இலங்கையின் அரசியல் வரலாற்றில் மக்களின் அங்கீகாரம் பெறாத ஒருவர் நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதியாக பதவியேற்றிருப்பது இதுதான் முதல் தடவை. ரணில் விக்கிரமசிங்க இன்று ராஜபக்ச சகோதரர்களின் பின்பலத்துடனேயே ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கின்றார். ராஜபக்ச சகோதரர்களின் ஒப்புதலின்றி இவர் எதனையும் செய்யமுடியாது என்பதே யதார்த்தம். இந்நிலையில், இவர் தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினைக்கான தீர்வு காணவேண்டுமென்று இதயசுத்தியாக விரும்பினாலுங்கூட அது இயலாத ஒன்றாகும்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் தமிழ்த் தரப்பின் ஆதரவுடன் ஆட்சியமைத்திருந்த காலப்பகுதியில் இவர்களிடம் இருந்து தமிழ்த்தரப்பு இனப்பிரச்சினைக்கான தீர்வை எதிர்பார்த்திருந்தது. ரணில் விக்கிரமசிங்க அப்போது தீர்வுக்கு முயற்சிப்பதாகக் காட்டிக்கொண்டாரே தவிர ஆத்மார்த்தமாக அதனைச் செய்து முடிப்பதற்கு அவர் தயாராக இருக்கவில்லை. இந்த இடத்தில் அவருக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியதன் மூலம் எமது தமிழ்த் தலைவர்களும் தவறு இழைத்திருக்கிறார்கள்.

தற்போதும் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே அரசியல் அமைப்பில் இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஜனாதிபதியாக அவர் கொண்டிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்க முடியும். ஆனால் சிங்களவர்கள் மிகப்பெரும்பான்மையாக உள்ள நாடாளுமன்றில் அதனை நிறைவேற்ற முடியாது என்று தெரிந்திருந்தும் அங்கு கொண்டு சென்றிருப்பது தமிழர்களுக்குத் தலையையும் சிங்களவர்களுக்கு வாலையும் காட்டுகின்ற அவரின் விலாங்குத் தந்திரமே ஆகும்.

ரணில் விக்கிரமசிங்க மாகாணசபைச் சட்டங்களில் உடனடியாகச் சில மாற்றங்களைச் செய்து விரைவில் மாகாணசபைத் தேர்தலை நடாத்தவுள்ளார் என்ற தோற்றத்தைத் தனது நாடாளுமன்ற உரையின்போது வெளிப்படுத்தியிருந்தார். மாகாணசபைச் சட்டம் நடைமுறைக்கு வருவதோ, மாகாணசபைத் தேர்தல் நடைபெறப்போவதோ உடனடிச் சாத்தியம் இல்லாதவை. உள்ளூராட்சித் தேர்தலையே நடாத்தவிடாமல், வேட்புமனுத் தாக்கல் செய்த பின்பும் பல தந்திரங்களைச் செய்து தேர்தலைக் காலவரையின்றி ஒத்திப்போட்ட ரணில் விக்கிரமசிங்க மாகாணசபைத் தேர்தலை நடாத்துவார் என்று எதிர்பார்ப்பது அரசியல் அறிவிலித்தனம். மாகாணசபைச் சட்டங்களில் திருத்தங்கள் செய்து தமிழ்மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்வார் என்று நினைப்பது அதைவிட அறிவிலித்தனமானது.

ரணில் விக்கிரமசிங்க மாகாணசபை விவகாரத்தைக் கையிலெடுத்திருப்பதன் முதலாவது நோக்கம் மாகாணசபைத் தேர்தலை நடாத்துமாறு கோரும் இந்தியாவின் அழுத்தங்களில் இருந்து விடுபடுவதாகும். இரண்டாவது நோக்கம், ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடாத்தி அறுதிப் பெரும்பான்மையுடன் தான் ஜனாதிபதியாக நீடிப்பதை உறுதி செய்வதாகும். ரணில் தீர்வு தருவார் என்ற நம்பிக்கையைத் தமிழ்மக்களிடையே ஏற்படுத்தி அவர்களின் வாக்குகளைக் கபளீகரிப்பதும் மாகாணசபை விவகாரத்தைப் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு சென்று அதனை நிறைவேற்ற முடியாமல் செய்வதன் மூலம் சிங்கள மக்களினது வாக்குகளை வாரிச் சுருட்டுவதுமே அவரது இலக்குகளாகும்.

கேள்வி: சிங்களப் பெருந்தேசியவாதத்திற்குள் அமிழ்ந்து கிடக்கும் இலங்கை நாடாளுமன்றத்தையும் அரசியல் யாப்பையும் எப்படி மீட்டெடுத்து, ஜனநாயகமயப்படுத்துவது? அல்லது எப்படி அதைப் பன்மைத்துவப்படுத்துவது?

பதில்: இலங்கை நாடாளுமன்றத்தை தமிழர் தரப்பு தனக்குச் சாதகமாகக் கையாள்வது என்பது ஒருபோதும் சாத்தியமாகாத ஒன்று. சிங்களவர்கள் மிகப்பெரும்பான்மையாக உள்ள இலங்கையின் நாடாளுமன்றில் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பெரும்பங்கு எப்போதுமே சிங்களவர்களாகவே இருப்பர். வாக்குப்பலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் ஜனநாயகத்தின்கீழ் எவ்வாறு தமிழர்களின் நலனை முன்னிறுத்தி அரசியல் யாப்பில் திருத்தங்களை மேற்கொள்ள முடியும்?

கேள்வி: அரசியற் தீர்வுக்கு இந்தியாவின் அனுசரணை பிரதானமாக இருக்க வேண்டும் என்று சிலர் வலியுறுத்துகிறார்கள். இன்னொரு தரப்பினரோ, 'ஈழப்போராட்டத்தையே நசுக்கி அழித்ததே இந்தியாதான். ஆகவே, இந்தியாவை நம்ப முடியாது. பதிலாக சர்வதேச சமூகத்தின் (மேற்குலகின்) ஆதரவைக் கோருவதே சரியானது' என்கின்றனர். தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் நிலைப்பாடென்ன?

பதில்: ஈழப்போராட்டத்தை இந்தியா மட்டுமா நசுக்கி அழித்தது? மேற்குலகுக்கு இதில் பங்கில்லையா? புலிகள் ஆயுத ரீதியாகப் பலம் பெற்றுவருவதை விரும்பாத இந்த இரண்டு சக்திகளும் இணைந்துதானே புலிகளை அழித்தொழித்தன. இந்தியாவை விடுங்கள், மேற்குலகு தன்னும் இந்தப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற அவலங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு முன்வரவில்லையே! இந்தியாவோ மேற்குலகோ தங்கள் நலன்சார்ந்தே ஈழத்தமிழர்களின் பிரச்சினையை அணுக முற்படுகின்றன என்பதே யதார்த்தம்.

புவிசார் அரசியல் இயங்கியலின்படி இந்தியாவின் அனுசரணையின்றி இலங்கையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு சாத்தியம் இல்லாததொன்று. சர்வதேசமும் இலங்கைத் தீவுக்கு அருகில் இருக்கும் இந்தியாவைத் தாண்டி அல்லது இந்தியாவின் கலந்தாலோசிப்பின்றி அரசியல் தீர்வு விடயத்தில் காத்திரமான பங்களிப்பை வழங்கப்போவதில்லை. இவற்றைப் புரிந்திருந்தும் புரியாததுபோல நாம் கடந்து செல்ல முற்படுவது அறிவுடமையாகாது.

கேள்வி: இனப்பிரச்சினைக்கான தீர்விலும் இலங்கையின் அரசியல் பொருளாதார நிலைப்படுத்தலிலும் இந்தியாவின் அனுசரணை, வகிபாகம் குறித்துத் தொடர்ச்சியாகப் பேசப்படுகிறது. ஆனாலும் இந்தியா இன்னும் இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்திருப்பதாகத் தெரியவில்லையே?

பதில்: இலங்கை மிகமோசமான பொருளாதாரப் படுகுழிக்குள் வீழ்ந்தவுடன் அதிலிருந்து இலங்கையை மீட்டெடுக்கும் முயற்சியில் இந்தியா ஆபத்பாந்தவனாகத் தன் கரங்களை நீட்டியதை மறுப்பதற்கு இல்லை. இந்தியா அண்டை நாடான இலங்கைக்குத் தான் செய்த உதவியை மனிதாபிமானதாகக் குறிப்பிட்டபோதும் அந்த உதவிகளில் இலங்கை அரசின் சீனச்சார்பை ஓரளவுக்கேனும் நிமிர்த்தும் எத்தனமும் இருந்தது வெளிப்படை. இலங்கையில் தன் பிடியை வலுப்படுத்துவதற்கு இந்தியா பல்வேறு வகையான திட்டங்களை முன்னெடுத்தும் வருகின்றது. ஆனால், பொருளாதார நிலையை வலுப்படுத்தி இலங்கையின் அரசியலில் ஸ்திரத்தன்மையைப் பேண முற்படுகின்ற இந்தியா இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஆக்கபூர்வமாக, தமிழ்மக்கள் திருப்திப்படும்படியாக எதையுமே செய்யவில்லை.

இந்தியாவின் அழுத்தத்தின் பேரிலேயே ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் ராஜீவ்காந்திக்கும் இடையில் இலங்கை -இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது. இதையொட்டியே 13ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் மாகாண சபையும் உருவானது. ஆனால், இணைந்திருந்த வடக்கு-கிழக்கு தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டபோது இந்தியா வாளாதிருந்தது. 13ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்கள் பல பறிக்கப்பட்டபோதும் இந்தியா வாளாதிருந்தது. இப்போது மாகாணசபைத் தேர்தல்கள் காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ள நிலையிலும் இந்தியா , இலங்கையின் மீது வலுவானதொரு அழுத்தத்தைப் பிரயோகிப்பதற்குத் தயாராகவில்லை. இதுதொடர்பாக ஈழத்தமிழ் மக்களுக்கு இந்தியாவின் மீது விசனம் உள்ளது.

கேள்வி: உண்மையில் இந்தியா யாருக்கு ஆதரவாக உள்ளது? தமிழர்களுக்காகவா, சிங்களவர்களுக்காகவா அல்லது தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையக மக்கள் என்ற இலங்கை மக்களுக்காகவா?

பதில்: இந்தியா ஒரு அரசு. அரசு என்று சொல்வதை விடவும் பேரரசு என்று சொல்வதே பொருத்தமானது. அது தன் காலடியில் கிடக்கும் சின்னஞ்சிறிய இலங்கைத் தீவில் தனக்குப் பகையான அந்நிய சக்திகள் எதுவும் காலூன்றாத வகையிலேயே எல்லா முடிவுகளையும் எடுக்கும். தமிழர்களுக்கு ஆதரவை வழங்கி சிங்களவர்களைப் பகைக்கவோ அல்லது சிங்களவர்களுக்கு ஆதரவை வழங்கித் தமிழர்களைப் பகைக்கவோ ஒருபோதும் விரும்பாது. தமிழர்களுக்கான ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படையாக எடுத்தால் தென்னிலங்கை இந்தியாவின் பகை நாடுகளின் பக்கம் நாடும் என்பது திண்ணம். இதனால், இந்தியா ,இலங்கையில் தமிழர்களுக்கா அல்லது சிங்களவர்களுக்கா என்று இல்லாமல் தனது சொற்கேட்டு நடக்கக்கூடிய தலைவர்களை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவதற்கான ஆதரவையே எப்போதும் வழங்கும்.

இந்திராகாந்தி உயிரோடு இருந்திருந்தால் வங்காளதேசம் பாகிஸ்தானில் இருந்து பிரிந்து போவதற்கு உதவியதுபோல

(09ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் இனத்தை வழிப்படுத்துவதற்கு எங்களிடம் இன்று ஒரு தேசியத் தலைமை இல்லை!

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்காவில் இருந்து ஈழம் பிரிந்துபோவதற்கும் உதவி செய்திருப்பார் என்ற கருத்தும் எம்மவர்களிடையே உள்ளது. இது முற்றிலும் அபத்தமானது. ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா அமெரிக்க சார்பு நிலைப்பாட்டை எடுத்தபோதே அவரை வழிக்குக் கொண்டுவருவதற்காக, அவர்மீது அழுத்தங்களைப் பிரயோகித்து அவரைப் பணிய வைப்பதற்காக ஈழவிடுதலை இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கினாரேதவிர, அது ஈழ விடுதலையைப் பெற்றுக்கொடுப்பதற்காக அல்ல. இப்போதும் இந்திய மைய அரசின் அணுகுமுறை இதுதான்.

கேள்வி: இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பல்வேறு விதமான யோசனைகளும் பரிந்துரைகளும் பல தரப்பினாலும் முன்வைக்கப்பட்டுள்ளன. உங்களுடைய நிலைப்பாடு என்ன?

பதில்: இலங்கை ஒரு நாடு. அதில்தமிழ்மக்களுக்கு தனியான தொரு தேசம் என்பதே தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் நிலைப்பாடு. ஒருதேசம் குறிப்பிட்ட குறைந்தபட்ச நிலப்பரப்பையாவது கொண்டிருத்தல்வேண்டும். தமிழ்மக்களுக்கு என்று அவர்களின் பூர்வீக வாழிடங்களாக வடக்கு-கிழக்கு உள்ளது. ஒரு தேசம் ஒரு ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பைக் கொண்டிருத்தல் வேண்டும். தமிழ் மக்கள் காலனித்துவ காலத்திற்கு முன்பாக தனியான ஆட்சி அதிகாரங்களைக் கொண்டிருந்தார்கள். ஏன் விடுதலைப் புலிகள்கூட ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பைக் கொண்டிருந்தார்கள்தானே. ஒருதேசம் சில ஒருங்கிணைப்பு களை அதாவது, மையப்படுத்துதல் மற்றும் பரஸ்பர சார்பைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தோடு, ஒருதேசம் எப்பொழுதும் தான் ஒரு தேசம் என்ற உணர்வு நிலையையும் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வாறு, சர்வதேசம் ஓர் இனத்தைத் தேசம் என்று அங்கீகரிக்கக்கூடிய பண்பியல்புகள் யாவும் தமிழ் மக்களிடம் தாராளமாகவுள்ளன.

தமிழ்மக்களைத் தனியானதொரு தேசமாக அங்கீகரித்து, மைய அரசால் அதிகாரங்களை மீளப்பெறமுடியாதவாறு தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் சமஸ்டி நிலைப்பட்ட அரசியல் தீர்வே எமது நிலைப்பாடாகும். அதுவும் இந்தியா போன்று அரைகுறைச் சமஸ்டியாக அல்லாமல் சுவிற்சர்லாந்தின் சமஸ்டி முறைபோன்று அமைதல் வேண்டும். தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த இலங்கைத் தீவின் அமைதிக்கும் சுபீட்சத்துக்கும் இதுவே மிகவும் பொருத்தமானதும் ஆகும்.

கேள்வி: வடக்கு- கிழக்கு இணைப்பு சாத்தியமானதா? அதைச் சாத்தியப்படுத்துவதற்கு முஸ்லிகளின் ஆதரவைப் பெறுவது எப்படி?

பதில்: வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பூர்வீக நிலம் என்பது வரலாற்று உண்மை. தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரண்டுவிடக்கூடாது என்ற அடிப்படையில் இன்று அது தனித்தனி மாகாணங்களாகச் சட்டரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு இணைப்பு சாத்திய மானதா என்ற கேள்வியையும் தாண்டி அதனை எவ்வாறு மீளவும் இணைப்பது என்பதே முன்னுரிமை பெறவேண்டும். சிங்களப் பெரும்பான்மையின் மீது தமிழ்ச் சிறுபான்மையினராகிய நாம் கொண்டிருக்கும் சந்தேகங்களைப் போன்றே தமிழினத்தின் மீது முஸ்லிம்களுக்கும் அவர்களின் அரசியல் இருப்புக் குறித்து சந்தேகங்கள் உள்ளன. இரண்டு தரப்பும் உட்கார்ந்து இது குறித்து நிறையப் பேசவேண்டியுள்ளது. முஸ்லிம்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற குடையின்கீழ் தமிழ்த் தரப்புடன் கைகோர்க்காவிடின் நாளை அவர்களது இருப்பும் இந்தத் தீவில் சிங்களப் பெரும்பான்மையால் இல்லாதொழிக்கப்படும்.

கேள்வி: புலிகளின் காலத்திற்கும் (2009 க்கு முன்பும்) அதற்குப் பின்னுள்ள இன்றைய நிலைக்கும் உள்ள வேறுபாட்டை - அரசியல் நிலைமையை எப்படிப்பார்க்கிறீர்கள்?

பதில்: விடுதலைப் புலிகள் இலங்கை அரசாங்கத்துடன் பேரம் பேசும் அளவிற்கு ஒரு கட்டத்தில் இராணுவ வலுச்சமநிலையை எட்டியிருந்தார்கள். அப்போது, அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பும் அவர்களின் ஒற்றை விரல் அசைவின் கீழேயே கட்டுண்டும் இருந்தது. இன்று தமிழ் மக்களிடம் இலங்கை அரசாங்கத்துடன் சரிசமமாக உட்கார்ந்து பேரம் பேசும் அளவிற்குப் பலம் இல்லை. தமிழ்த்தேசியம் என்று வரிக்குவரி உச்சரிக்கும் தமிழ்க் கட்சிகளும் தங்களுக் கிடையே ஒற்றுமைப்பட்டவர்களாக இல்லை. இக் கட்சி களின் தலைவர்களில் பலர் சிங்களப் பேரினவாத அரசுடன் திரைமறைவில் தங்களுக்கான சலுகைகளைப் பெற்றுக்கொள்ப வர்களாகவே இருக்கிறார்கள். இதனால், தமிழ் மக்களின் மத்தியில் வீராவேசமாகப் பேசும் இவர்களால் அரசாங்கத்தின் முன்னால் கூனிக்குறுகியே நிற்கமுடிகிறது. இத்தலைவர்களின் பெயர்களை இங்கு நான் உச்சரிக்க விரும்பவில்லை. தமிழ்மக்களின் அரசியல் சாபக்கேடு இவர்கள்.

கேள்வி: இன்றைய நிலையில் தமிழ்க் கட்சிகளை ஒன்றி ணைப்பது சாத்தியமாகுமா?

பதில்: தமிழ் இனத்தை வழிப்படுத்துவதற்கோ அல்லது தமிழ்க் கட்சிகளை நெறிப்படுத்துவதற்கோ எங்களிடம் இன்று ஒரு தேசியத் தலைமை இல்லை. எங்களிடம் இருப்பவர்கள் எல்லோரும் கட்சிகளின் தலைவர்கள்தாம். வாக்குப் பொறுக்கும் அரசியலில் இத் தலைவர்கள் யாவரும் எப்போதும் தமது கட்சிகளின் நலன் குறித்தும் தம்மை எவ்வாறு முன்னிலைப்படுத்துவது என்பது குறித்துமே சிந்திப்பார்கள். இவர்களுக்குக் கடிவாளம் போடுவதற்கு அப்போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்தார். இன்று இந்தப் பாத்திரத்தை வகிக்கின்ற பொறுப்பு சிவில் சமுகங்களிடமே உள்ளது. ஆனால், இருக்கின்ற சிவில் சமுகங்களிலும் பல கட்சிகளின் பினாமிகளாகவே உள்ளன. அல்லது சிவில் சமுகத்தின் மூலம் ஒருவரின் பெயர் பிரபல்யமாகிவிட்டால் அவருக்கும் தேர்தல் அரசியலில் ஆசை தொற்றிக்கொள்கிறது. இந்நிலை மாறவேண்டும். கட்சிசார்பற்ற தமிழினத்தின் நலனை மாத்திரமே குறிக்கோளாகக் கொண்ட சிவில் சமுக அமைப்பொன்று பலம்பெறவேண்டும்.

கேள்வி: பிரதான அரசியற் தலைமைகளும் கட்சிகளும் ஊடகங்களும் பகை மறப்பிற்கும் நல்லிணக்கத்துக்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் தயங்குவது ஏன்?

பதில்: இலங்கையில் மாறி மாறி ஆட்சிசெய்த ஒவ்வொரு கட்சியும் சிங்கள வெகுஜன மக்களிடையே பேரினவாத உணர்வை ஊட்டி அதனை அறுவடை செய்தே ஆட்சி பீடம் ஏறின. ஒவ்வொரு கட்சியும் பேரினவாதத்தை ஒன்று டன் ஒன்று போட்டிபோட்டே ஊட்டி வளர்த்தன. உச்சாணிக்கொப்பில் ஏறி அமர்ந்திருக்கும் பேரினவாதப் பேயை கீழே இறக்குவதற்கு எந்தக் கட்சியும் எந்த ஊடகமும் இன்று தயாராக இல்லை என்பதே யதார்த்தம். இறங்கச்சொன்னால் தங்களை அது திருப்பித்தாக்கிவிடும் என்று அஞ்சுகிறார்கள்.

சிங்களத் தரப்பில் மாத்திரமல்ல தமிழ்த்தரப்பிலும் அறிவுபூர்வமாக அல்லாமல் உணர்ச்சிவசப்பட்ட இனவா தத்தை மக்களிடையே விதைக்கின்ற அரசியல்வாதிகளே அதிகம். இது ஒருபோதும் ஆக்கபூர்வமாக அமையப் போவதில்லை.

கேள்வி: இலங்கையில் சீனப் பிரசன்னத்தையும், அதிகரித்து வரும் அதனுடைய செல்வாக்கையும் எப்படி நோக்குகிறீர்கள்? தமிழர்கள் சீனாவுடன் கொள்ள வேண்டிய அரசியல் இராசதந்திர உறவு எப்படியானதாக இருக்க வேண்டும்?

பதில்: சீனா, இந்தியாவுக்குப் போட்டியாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தன் செல்வாக்கை அதிகரிக்க விரும்பியே இலங்கையில் காலூன்றியுள்ளது. ஒருவகை யில் இலங்கையை தன் டிராகனின் கைகளுக்குள் கொண்டு வந்தும் விட்டது என்றுகூடச் சொல்லலாம். இலங்கை விரும்பினாலும் சீனாவின் பிடியினுள் இருந்து விலக முடி யாத நிலையே நீடிக்கிறது. இது இராணுவ ரீதியான முற்றுகை யல்லாமல் பொருளாதார ரீதியான முற்றுகையாகவே உள்ளது. தமிழ்மக்கள் தமது உணவில் ஒருபோதும் சேர்த்துக்கொள்ளாத கடல் அட்டைகளுக்கான பண்ணை களை எமது கடலில் உருவாக்கியிருப்பதும் இம்முற்றுகையில் ஓர் அம்சம்தான். தமிழர்கள் வேண்டுமென்றால் சீனாவிடம் பொருளாதார ரீதியான உதவிகளுக்கு கையேந்தலாமே தவிர சீனாவிடம் இருந்து தங்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வுக்கு ஒத்துழைப்பை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

தமிழ் மக்களிடம் வெளிநாடுகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான ஒரு வெளியுறவுக்கொள்கை இல்லை. ஒவ்வொரு தலைவர்களும் தனித்தனியாகவும் கூட்டாகவும் வெளிநாடுகளின் தூதுவர்களைச் சந்தித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இதனால், ஆகப்போவது எதுவுமேயில்லை. இந்தச்சந்திப்புகள் யாவும் சம்பிரதாயபூர்வமானவை. தமிழ் மக்களுக்கான வெளியுறவுக்கொள்கை ஒன்றைத் தாபிக்காத வரைக்கும் சீனாவுடன் மட்டுமல்ல் உலகின் எந்தவொரு நாட்டுடனும் அரசியல் ரீதியான இராசதந்திர உறவைப்பேண முடியாது.

கேள்வி: சிங்களத் தேசியவாதம், தமிழ்த்தேசியவாதம், முஸ்லிம் தேசியவாதம், மலையகத் தேசியவாதம் என இன்று இன ரீதியான தேசியவாத உணர்வு கூர்மைப்பட்டிருக்கிறது. இந்தச் சூழலில் பகை மறப்பு, நல்லிணக்கம், அரசியல் தீர்வு, சமாதானம் போன்றவற்றை எட்டுவது எப்படி?

பதில்: இன்றைய மூன்று பெரும் இயக்கங்களில் ஜன நாயகம் மற்றும் சோசலிசத்துடன் தேசியமும் ஒன்றாகும் என்ற சன்யாட்-சென்னின் வார்த்தைகளை நாம் புறந்தள்ள முடியாது. தேசியம் என்றால் என்ன? ஒரு இனத்தின் வாழிடம், அது பேசும் மொழி, அதன் பண்பாடு, அதன் நம்பிக்கை ஆகியனவற்றின் கூட்டுப் பிரக்ஞைதானே தேசி யம். அந்தவகையில், ஒவ்வொரு இனத்தினதும் தேசியம் என்பதும் அத்தேசிய இனத்துடன் கூடப்பிறந்ததாகும். இலங்கைத் தீவில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழர்களின் தேசியங்கள் இணைந்தே இலங்கைத் தேசியமாக உருப்பெறவும் வலுப்பெறவும் முடியும். இவற்றில் சிங்களத் தேசியம் ஆதிக்கவெறிகொண்ட தேசியமாக மாறிவிட்டுள்ள நிலையில் மற்றைய தேசியங்கள் ஒடுக்குமுறையை எதிர்க்கும் தேசியங்களாக ஆகிவிட்டுள்ளன. சிங்களத் தேசியத்தின் ஆக்கிரமிப்பு ஏனைய இனங்களிடையே தேசிய உணர்வைக் கூர்மைப்படுத்திவிட்டுள்ளது. கூர்மைப்பட்டுள்ள இத்தேசி யங்கள் சிங்களத் தமிழ் மக்களிடையே பகைத் தேசியங் களாகவும் உருமாறியுள்ளன. இவற்றின் நடுவில் நின்று பகைமறைப்பு, நல்லிணக்கம், அரசியல் தீர்வு, சமாதானம் போன்றனவற்றைத் தேடுவது கடினமானதுதான்.

இலங்கையை 2004ஆம் ஆண்டு கடற்கோள் தாக்கிய போது விடுதலைப்புலிகளும் சிங்கள இராணுவமும் தங்கள் பகையை மறந்து ஒருவருக்கொருவர் உதவிசெய்து மீட்புப் பணியில் ஈடுபட்டதாக ஐக்கியநாடுகள் சபையே பாராட்டியுள்ளது. இலங்கையில் பிளவுபட்டுள்ள இத்தேசியங்களை ஒற்றுமைப்படுத்துவதற்கான சக்தியாக சூழலியற் தேசியத்தை நான் பார்க்கிறேன். உலகம் இன்று எதிர்நோக்கும் மிகப்பெரும் பயங்கரவாதம் காலநிலை மாற்றம் என்னும் சூழலியற் பயங்கரம்தான். பூமி வெப்ப மடைவதன் விளைவாக ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றத்தில் மோசமாகப் பாதிக்கப்படப்போகும் நாடுகளில் இலங்கையும் ஒன்று. கடல்மட்டம் உயர்ந்து வருவதால் இலங்கையின் கரையோரக் கிராமங்கள் யாவும் கடலால் காவுகொள்ளப்பட்டுவிடும் என்றும், யாழ். குடாநாடு ஆனையிறவுப் பகுதியில் பெருநிலப்பரப்பில் இருந்து துண்டாடப்பட்டு விடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இச்சூழலியற் பேரனர்த்தம் தமிழ், சிங்களம் என்று பேதம் பார்க்காது ஒட்டுமொத்த இலங்கையையுமே கபளீகரித்துவிடும். எங்களுக்கிடையே தேசிய வாதங்களைக் கூர்மைப்படுத்தியது போதும். சிங்களப்பெரும் தேசிய வாதம் சிறுபான்மை இனங்களினது சுயத்தையும் அரசியல் உரிமைகளையும் அங்கீகரித்து அவர்களை இலங்கைத் தேசியர்களாகவும் உணரவைப்பதன் மூலமே இலங்கை எதிர்நோக்கும் சூழலியற் பயங்கரவாதத்தை ஒட்டுமொத்தப் பலத்துடன் எதிர்கொள்ள முடியும்.

கேள்வி: மக்களின் போராடும் குணாம்சம் மழுங்கி வருகிறது. அரசியல் தலைமைகளின் மீது நம்பிக்கை வைக்க முடியாத நிலை உருவாகியுள்ளது என்பதைக் குறித்து...?

பதில்: தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டம் ஜனநாயக வழியிலான போராட்டத்திலிருந்து ஆயுதப் போராட்டமாக பரிணாமித்தபோது அப்போராட்டத்தில் தமிழ் வெகுமக்கள் முழு அளவில் தங்களை இணைத்துக்கொள்ளவில்லை. ஒரு குறித்த எண்ணிக்கையானோர் நேரடிப் பங்களிப்பாளர்களாக இயக்கங்களில் உறுப்பினர்களாகிப் போராடியபோது பெரும் சதவீதத்தினர் வெளியே நின்றுகொண்டிருந்தனர். பவுணும் பணமும் கொடுத்தால் போதுமானதாகக் கருதிக்கொண்டார்கள். இயக்கங்கள் அறவழிப் போராட்டங் களுக்கு அழைத்தால் இவர்களில் சில சதவீதத்தினர் கலந்துகொண்டும் இருந்தார்கள். இப்போது அந்தநிலை இல்லை. போராட்டத்தில் எவ்விதத்திலும் பங்கேற்காத, போராட்டத்தின் வலிகளை, பாடுகளை எவ்விதத்திலும் அனுபவிக்காத புதிய தலைமுறை எங்களிடம் உருவாகி விட்டது. இவர்களின் நேரங்களை இன்று கைத்தொலை பேசிகளும் சமூக ஊடகங்களும் மாய உலகொன்றுக்குள் இழுத்துச்சென்றுகொண்டிருக்கின்றன. ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோன்று இவர்களை வழிநடத்தக்கூடிய தலைவர்களும் எம்மிடம் இல்லை. இதனால், இவர்களின் தேசியம் பற்றிய பார்வையும் குறுகிமறுகி வருவதோடு போராட்டக் குணாம்சமும் அருகி வருகிறது. இதன் வெளிப்பாடே ஐந்து, பத்துப் பேருடன் இடம்பெற்று வரும் போராட்டங்கள்.

கேள்வி: தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் புதியதொரு அரசியற் பண்பாட்டை உருவாக்குவதற்கு முயற்சிக்கிறது. இதனைப் பெருந்திரள் சமூகம் எப்படி அங்கீகரிக்கும்?

பதில்: தமிழ் அரசியற் கட்சிகள் பலவும் தேசியத்தை ஒரு அரசியற் கோசமாக மட்டுமே தேர்தல் மேடைக ளில் பயன்படுத்தி வருகிறார்கள். தேசியம் என்பது ஒரு வெற்றுக்கோசம் அல்ல. அதனுள்ளே அந்த இனத்தின் ஆன்மாவே அடங்கியுள்ளது. தேசியத்தின் ஒரு கூறாக மண் மீட்பைப் பற்றிப் பேசி வருகிறோம். இந்த மண் என்பது எங்கள் சூழல். இதனால்தான் தமிழ்த்தேசியத்தின் பிரிக்க முடியாத, பிரிக்கக்கூடாத ஒரு கூறாக சூழலியம் என்கின்ற கோட்பாட்டை உள்வாங்கி நாங்கள் பயணித்து வருகிறோம். உலகளாவிய சூழல் நெருக்கடிகள் இக்கோட்பாட்டை நோக்கித்தான் அரசியல் கட்சிகளை நெட்டித்தள்ளி வருகின் றன. இந்தியாவில் தேர்தல் ஆணையம் சகல கட்சிகளும் தங்கள் தேர்தல் அறிக்கைகளில் சூழல் பாதுகாப்புக்கான உத்தரவாதங்கள் குறித்துக் கண்டிப்பாகக் குறிப்பிடவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. நீங்கள் கேட்பதுபோல பெருந் திரள் சமூகம் இதனைப் புரிந்துகொள்வதற்குச் சற்றுக் கால தாமதம் ஆகலாம். ஆனால், புரிந்துகொள்ளும் காலம் வெகு தூரத்தில் இல்லை. நாங்கள் தேர்தல் வெற்றி குறித்து கவலைப் படுபவர்கள் அல்லர். ஆனால், பசுமை அரசியலுக்கு வித்திட்டவர் களாக நாங்கள் இருக்கவேண்டும் என்றே விரும்புகின்றோம்.

தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284



மனிதர்களை கொல்லும் மதம்

● ஜெரா

அண்மைக்காலமாக தமிழக சினிமாப்படங்களில் பௌத்தத்தை ஓர் அமைதிவழி மதத்தின் குறியீடாகக் காட்டப்படுவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. பா. ரஞ்சித், மாரி செல்வராஜ் போன்ற தலித்திய சினிமா இயக்குநர்கள் தம் படங்களில் பௌத்த தத்துவங்களையும், புத்தர் சிலைகளையும் பயன்படுத்திவருகின்றனர். அதாவது ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படுபவர்கள் தம் துணைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய ஆயுதமாக பௌத்தத்தையும், புத்தரையும் இத்தகைய சினிமாக்கள் முன்மொழிகின்றன. உண்மையில் பௌத்தத்துக்கு இத்தகைய சக்தியுள்ளதா?

புத்தரும், அவர் உலகிற்கு போதித்த தத்துவங்களும் மிக உன்னதமானவை. மானுட வாழ்வுக்கு அமைதியையும், அன்பையும், பிறர்க்கு துன்பம் விளைவிக்காமையையும் போதிப்பவை. புத்தர் பௌத்தத்தை ஒரு மதமாக எங்கேயும் பிரகடனம் செய்யவில்லை. பௌத்தத்தை ஒடுக்குமுறைகளுக்கு எதிரான ஆயுதமாக எங்கேயும் பயன்படுத்தவுமில்லை. அதனை ஒரு வாழ்வியல் நெறியென்றார். வாழ்வுக்குப் பயன்படுத்தவேண்டிய தத்துவமென்றார். அந்தத்தத்துவத்தின்படி தன் வாழ்வினை வாழ்ந்து, உலக பற்றுப் பாசங்களிலிருந்து விடுபட்டு வாழ்ந்து காட்டினார் புத்தபெருமான். எனவே பௌத்தமும், புத்தரும் அவரவர் வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய நற்பண்புகளே தவிர, அது ஒடுக்குமுறைக்கு எதிரான ஆயுதமல்ல. மறுபுறத்தில் ஒடுக்குமுறைக்குள்ளாவோர் மதமாகவோ, தத்துவமாகவோ பின்பற்ற, தற்போது பௌத்தமும், அதனைப் பின்பற்றுவோரும் புத்தர் போதித்தவைகளையா பின்பற்றுகின்றனர்? அதற்கு பௌத்தம் நிலவும் நாடுகளில் எங்கேயாவது எடுத்துக்காட்டுகள் உள்ளனவா?

இல்லை என்றுதான் இந்தக் கேள்விக்கும் பதில் எழுதவேண்டும். உலகில் பௌத்த மதத்தை அரச மதமாக ஏற்றுக்கொண்டு ஆட்சி நடத்தும் பிரதான மூன்று நாடுகளுமே தன் நாட்டில் வாழும் சக இனங்களை அடக்கி - ஒடுக்கி இனப்படுகொலை செய்ததன் ஊடாகவே உலகின் முன் அறிமுகப்பட்ட நாடுகளாக இருக்கின்றன. அதிகளவு பௌத்தர்களைக் கொண்ட கம்போடியாவில் 1975 ஆம் ஆண்டு தொடக்கம் 1979 ஆண்டு வரை அரசபடைகள் மேற்கொண்ட இனப்படுகொலையில் கிட்டத்தட்ட 02 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதற்கு அடுத்ததாக அதிகளவு பலமிகு பௌத்தத்தை தன் அரச மதமாகக் கொண்டிருக்கும் இலங்கை அரசு 1948 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டுவரை தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பல லட்சம். பௌத்தத்தைத் தலைமை மதமாகக் கொண்டிருக்கும் மியன்மாரில் இன்றும் றோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராகப் பெரும் இனவெறித் தாக்குதல்களையே பௌத்தப் படைகள் நடத்திக்கொண்டிருக்கின்றன.

பௌத்தத்தைத் தன் அரச மதமாக நடைமுறையில் வைத்திருக்கும் இலங்கையை உதாரணமாக இவ்விடத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

இலங்கை என்கிற நாட்டின் உருவாக்கத்திற்கே பௌத்தம் தான் அடிப்படை வகுத்துக்கொடுத்தது என்கிற அளவிற்கு மிக இறுக்கமானதும் வன்முறை மிக்கதுமான வரலாறு கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. வரலாற்றுக்கு முன்பிருந்தே பௌத்தம் நிலைத்திருப்பதற்கான தீவுகளில் ஒன்றாக இலங்கையை புத்தபெருமான் தேர்ந்தெடுத்தார் எனவும், பௌத்தத்திற்கு எவ்விதத்திலும் தீங்கு நேராவண்ணம் பார்த்துக்கொள்வது மட்டுமே அரசின் வேலை எனவும் வரலாறு உருவாக்கப்பட்டிருக்கின்றது. பௌத்தத்தைப் பின்பற்றாதவர்கள் கொல்லப்படவேண்டியவர்கள். அவர்களைக் கொல்வதனால் சொர்க்கத்திற்குப் பயணமாகும் வாய்ப்பு எவ்விதத்திலும் தடைப்படாது என்கிற தோரணையில் தமிழர்களைப் பாரியளவில் படுகொலைசெய்த துட்டகாமினி என்கிற சிங்கள அரசனுக்கு பௌத்த துறவிகள் அறிவுரை வழங்கியிருக்கின்றனர். அதனையே இன்றைய சிங்கள ஆட்சியாளர்களும் கைக்கொள்கின்றனர். எனவே இலங்கையில் மிக மோசமான - மனித குலத்துக்கு விரோதமான அரசியல் ஒழுக்கத்தை பௌத்தம் கற்பித்திருக்கின்றது. கற்பித்துக்கொண்டிருக்கின்றது.

இன்றைய நாட்களில் சமூக வலைத்தளங்களில் அதிகளவில் இலங்கை பௌத்த பிக்குகளின் காணொலிகள் வெளியாகின்றன. அந்தக் காணொலிகளில் தோன்றும் பௌத்த பிக்குகள் மிக ஆக்ரோசமாக கைகளை இறுக்கமாகப் பிடித்து நீட்டி எதிரில் இருப்பவர்களை மோசமானவகையில் பேசுவதும், கெட்டவார்த்தைகளைக் கொட்டுவதும், மிரட்டுவதும், பற்களைக் கடித்துக்கொண்டு அடிக்கப்பாய்வதுமாகக் காணப்படுகின்றனர். இதுவும் இன்று நேற்று உருவான பௌத்தப் பழக்கவழக்கமல்ல. இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே இதுதான் நிலை. இந்நாடு சிங்கள - பௌத்த நாடு. அவர்கள் மட்டுமே இந்நாட்டுக்கு உரித்துடையவர்கள். அவர்கள் மட்டுமே இங்கு வாழலாம் எனும் இனவெறிக்கொள்கையுடைய பௌத்த பிக்குகள் இந்நாட்டின் வரலாறு முழுவதுமே கலவரக்காரர்களாகவே வாழ்ந்திருக்கின்றனர். நாட்டில் தமிழர்களுக்கு எதிராக வடக்கிலும், தெற்கிலும் ஏவப்பட்ட அனைத்துக் கலவரங்கள், இனப்படுகொலைகள், இனச் சுத்திகரிப்பு சம்பவங்களுக்குப் பின்னாலும், பௌத்த பிக்குகளின் ஆவேசமான உரைகளைக் கேட்டு அதன்பால் ஈர்க்கப்பட்டு குற்றச்செயல்களில் ஈடுபட்ட சிங்கள இளைஞர்கள் ஏராளம். தாம் மட்டுமல்லாது, தம்மிடம் ஆன்மீக ஞானம் பெற வருபவர்களையும் வன்முறையாளர்களாக மாற்றி தம் இருப்பிற்கு இலங்கை பௌத்தம் பயன்படுத்தி வந்திருக்கின்றது. அடுத்தவர் மீது அன்பையும், கருணையையும் பொழியச் சொன்ன பௌத்த தத்துவம், இலங்கையின் பௌத்தம் போதிக்கும் எதனையுமே வலியுறுத்தவில்லை.

பௌத்த துறவிகள் முற்றும் துறந்து, உலக பற்றுப் பாசங்களிலிருந்து விடுபட்டு, மக்கள் தரும் பிச்சையிலேயே வனங்களில் வாழவேண்டும் என்கிறது பௌத்தம். ஆனால் இலங்கையின் பௌத்த துறவிகள் வாழ்வின் அனைத்து இச்சைகளுக்கும் உட்பட்டவர்களாக வாழ்கிறார்கள் என்பதற்கு சமூக ஊடகங்கள் முழுவதும் காணொலிகள் கொட்டிக்கிடக்கின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களோடு தனியறையில் தங்கியிருந்த நிலையில் பிரதேச மக்களால் நிர்வாணமாக்கி அம்பலப்படுத்தப்பட்ட பௌத்த பிக்கு பற்றிய செய்திகள் அண்மையில் வந்தன. தன்னிடம், விகாரைக்கு ஆசி பெற வந்த பெண்களைப் பாலியல் குற்றத்திற்குட்படுத்திய பௌத்த பிக்கு ஒருவரை அவுஸ்திரேலிய பொலிஸார் அண்மையில்கைதுசெய்திருந்தனர். குடி போதையையும், போதைதரும் பதார்த்தங்களையும் பயன்படுத்தும் பௌத்த துறவிகளை இலங்கையின் வீதிகளில் சாதாரணமாகவே அவதானிக்க முடியும். இவ்விடத்திலெல்லாம் பௌத்தம் போதித்த ஒழுக்கம் பற்றிய எவ்விதியையும் இலங்கை பௌத்த துறவிகள் பின்பற்றவில்லை.

ஒரு நாட்டின் தொல்லியல் என்பது அந்நாட்டின் மெய் வரலாற்றின் எச்சங்களாகக் கொள்ளப்படுவது. ஆனால் இலங்கையின் தொல்லியல் என்பது தமிழ் மக்களை ஒடுக்குமுறைக்குள்ளாக்கும் ஒரு கருவியாக மாற்றப்பட்டிருக்கிறது. இவ்வாறு மாற்றிய பெருமை பௌத்த பிக்குகளையே சாரும். தொல்லியல் திணைக்கள அதிகாரிகளுக்கு பணம் கொடுத்து, பௌத்த துறவிகள் உத்தரவிடும் வேலைகளைச் செய்யுமளவுக்குப் பணிக்கப்பட்டிருப்பதாக அந்தத்திணைக்களத்தின் பணிப்பாளர் ஊடகங்களின் முன்னிலையில் ஒப்புக்கொண்டிருக்கின்றார். இலங்கையின் வடக்கு, கிழக்கு பாகங்களில் இருக்கின்ற தொன்மையான சைவ வழிபாட்டிடங்களை ஆக்கிரமித்து பௌத்த விகாரை அமைத்து, பௌத்த துறவிகள் குடியேறுவதற்கும், அவர்களுக்கும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கும் ஏழேழு தலைமுறைக்கும் சொத்து சேர்ப்பதற்காக அவ்விடங்களைப் பயன்படுத்துவதற்கும், பல நூறு ஏக்கர் காணிகளை தொல்லியல் பாதுகாப்பு எனும் பெயரில் தமிழர்களிடமிருந்து அபகரித்துக் கொள்ளவும் பௌத்த தேரர்கள் இரவு பகலாகப் பாடுபடுகின்றனர். இராணுவம், பொலிஸ், நீதி, நிர்வாகம் உள்ளடங்கிய அரசின் அனைத்துக் கட்டமைப்புக்களும் பௌத்த பிக்குகளின் இந்த அடாத்து நடவடிக்கைகளுக்கு எதிராகக் காரியமாற்றத் தயங்குகின்றன. அஞ்சுகின்றன. குருந்தூர்மலையில் குடியேறியிருக்கும் பௌத்த துறவி, அந்தப்பிரதேசத்தின் பூர்வகுடிகளான தமிழ் மக்கள் இப்போதும் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தும் 247 ஏக்கர் காணிகளைக் கோருகின்றார். புல்மோட்டையில் குடியேறியிருக்கும் பௌத்த துறவி தென்னமரவாடியின் தமிழ் மக்களது பூர்வீக நிலத்தில் 500 ஏக்கர் காணியைக் கோருகின்றார். முற்றிலும் துறந்து, பரிநிர்வாணம் அடைவதையே தம் இலட்சியமாகக் கொண்டிருக்க வேண்டிய பௌத்த துறவிக்கு ஒரு பெரும் பணக்காரனுக்கு இருக்கவேண்டிய இவ்வளவு சொத்துகள் ஏன்?

ஆகவே பௌத்தம் தன்னை உடனடியாக சீர்திருத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றது. அதன் மீது போர்த்தப்பட்டிருக்கும், அமைதி, அன்பு, அறம், உயிர் நேசிப்பு போன்ற கவர்ச்சிமிகு போர்வைகள் விலக்கப்படவேண்டியிருக்கின்றது. இவ்வாறு கோரமிகு வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கும் பௌத்தத்தைப் பின்பற்ற முன்மொழிய முன் அதன் நடப்பு நடைமுறைகளைப் பற்றிய வாதவிவாதங்களையும் ஆரம்பிக்கவேண்டியிருக்கின்றது. இவற்றில் எதனையும் செய்யாது புத்தர் பரிநிர்வாணம் அடைந்தபோது இருந்த பௌத்தமே இப்போது இருக்கிறது என நம்பிக்கொண்டு அதனை முன்மொழிவதானது, உலகுக்கு அறத்தையும், அன்பையும், நீதியையும் போதித்த தமிழர்களையும் இனப்படுகொலையாளர்களாக - மிலேச்சத் தனமிகு ஒடுக்குமுறையாளர்களாக மாற்றும் முயற்சியே ஆகும். ஏனெனில் தற்போதைய பௌத்தம் என்பது ஒடுக்குமுறையின் ஒரு கருவிதான். அது அதிகாரத்தின் பலத்தை பல்கிப் பெருக்கவே சேவகம் செய்கின்றது.

தேநீர் நேரத்தில் சில கேள்விகள்

புலம்பெயர் சுழல் நாற்காலி அட்டக்கத்தி வீரர்களே விடுதலை போராட்டத்தின் தார்மீகத்தை விமர்சிக்கின்றனர்

"ஒரு எழுத்தாளர் மற்றும் வழக்கறிஞராக மனித இயல்பு மேன்மையடையும் என்று நான் நம்புகிறேன். நம்மால் இன்னும் சிறப்பாக ஆக முடியும் என்ற நம்பிக்கையுடன் எப்போதும் இருக்கிறேன்."

சமீபத்தில் ஆஸ்திரேலியாவின் உயரிய இலக்கிய விருதான மைல்ஸ் பிராங்க்ளின் விருதை வென்ற சங்கரி சங்கரி சந்திரன் சிட்னியில் வசித்து வருகிறார். அவர் ஏற்கனவே ' Songs of Sun God, Barriers, Chai time at cinnamon Gardens **எனும் மூன்று நாவல்களை எழுதியுள்ளார். எதிரொலி வாசகர்களுக்காக அவருடன் நிகழ்த்திய நேர்காணல் இது.**

எதிரொலி: ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றிய உங்களை எழுத்தாளராக மாற்றிய திருப்புமுனை எதுவென நினைக்கிறீர்கள்?

சங்கரி சந்திரன்: எனக்கு 11 வயதாக இருந்தபோது, என் வாழ்க்கையில் ஒரு அசாதாரண தாக்கத்தை ஏற்படுத்தியவராக திருமதி. வாண்டேர்மார்க் என்ற ஆசிரியர் இருந்தார். அவர் என் திறமையிலும், எழுத்தின் மீதும் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார், அவர் எப்போதும் "உன்னால் எதையும் எழுத முடியும். எழுது , பின்னர் அதைச் செம்மைப்படுத்தி மேம்படுத்து" என்று எனக்கு தொடர்ந்து உற்சாகமூட்டினார். என் இளமைப் பருவத்தில் சென்னையில் உள்ள ஹிக்கின்பாதம் புத்தகக் கடைக்குச் சென்றோம். அங்கே என்னைப் போன்ற எழுத்தாளர்களின் புத்தகங்களை விற்பனை செய்யப்பட்டுக்கொண்டிருந்தன. அவர்களால் எழுதப்பட்ட கதைகள் எனது சொந்த மூதாதையரின் பின்னணியில் இருந்து வந்தவை. ஏனெனில் அதுவரை நான் ஆஸ்திரேலியா மற்றும் ஆங்கில இலக்கியங்களில் நமது சந்ததியினரைப் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டு வெளிவந்த கதைகளைப் படித்ததில்லை.

தெற்காசிய எழுத்தாளர்கள் ஆங்கிலத்திலும், முன்னோர்களின் மொழிகளிலும், எழுதுகிறார்கள் .நாங்கள் நன்றாக எழுதுகிறோம், எங்கள் அனுபவங்கள் மதிப்பிடப்படுகின்றன, படிக்கப்படுகின்றன, வெளியிடப்படுகின்றன, விற்கப்படுகின்றன என்பதே எனக்கு மிகப்பெரிய உத்வேகத்தை கொடுத்தது. நான் சட்டக்கல்லூரியில் சேர்ந்தேன். நான் கலையின் வார்த்தைகளை நேசித்தேன்.அதனால் நான் சட்டக்கல்லூரியில் படித்து ,ஒரு பெரிய சட்ட நிறுவனத்தில் சேர்ந்தேன். சமூக நோக்கம் மற்றும் சமூக விழுமியங்களை விரும்பியதால் மிக விரைவாக சமூக நீதி மையத்திற்குள் செல்ல முடிந்தது, பின்னர் நாங்கள் லண்டனிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பி வந்தோம், ,. எங்களுக்கு நான்காவது குழந்தை பிறந்தது. வழக்கறிஞர் பணியில் இருந்து ஓய்வு எடுத்தேன். ஓய்வின் போது எனது முதல் நாவலான 'Songs of Sun God' இனை எழுதினேன். எழுத ஆரம்பிதால் பின்னர் அதை நிறுத்த முடியாது தானே.

எதிரொலி : எந்தவொரு எழுத்தாளரும் முதலில் கட்டுரைகள், சிறுகதைகள் மூலம் தங்கள் எழுத்துப்பயணத்தை தொடங்கி பின்னர் படிப்படியாக நாவல்களை எழுதுவது வழக்கம். ஆனால் நீங்கள் நேரடியாக வே நாவலுக்குள் நுழைவதற்கான மகத்தான பாய்ச்சலை செய்திருக்கிறீர்கள். உங்கள் முதல் படைப்பாக நாவலை எழுத ஏதேனும் காரணங்கள் இருந்ததா ? அல்லது நீங்கள் முன்பு சிறுகதைகளை எழுத முயற்சித்தீர்களா ?

சங்கரி சந்திரன்: நாங்கள் லண்டனில் 10 வருடங்கள் வாழ்ந்த பிறகு அங்கிருந்து பியூனஸ் அயர்ஸில் இரண்டு மாதம் ஓய்வடுத்து அங்கிருந்து சிட்னிக்கு திரும்பி வரும்போது அந்த விமானத்தில் ஜூலியா மற்றும் ஜூலி என்ற படத்தைப் பார்த்தேன். அது ஒரு வேடிக்கையான படமெனினும் உண்மையில் எனக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அந்தப் படத்தில் ஜூலி எனும் வலைப்பதிவர் ஜூலியா சைல்ட்ஸ் என்று அழைக்கப்படும் பிரபல அமெரிக்க சமையல்காரர் மற்றும் இல்லத்தரசி பற்றி பதிவுகளை எழுதுகிறார். வலைப்பதிவு என்பது வெறும் வார்த்தைகள் என்று கூறும் ஒரு காட்சி உள்ளது..அதைக் கேட்டபொழுது என்னிடமும் சொற்கள் உள்ளன, என்னால் எழுத முடியும் என்று அந்த விமானப் பயணத்தில் நினைத்துக் கொண்டிருந்தேன். எனவே நான் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றதும், 500 சொற்களைக் கொண்டு எனது பயண அனுபவத்தை வலைப்பதிவு செய்யத் தொடங்கினேன், அந்த பதிவானது லண்டனில் இருந்து வீட்டிற்கு திரும்பும் பயணம் ,அவஸ்திரேலியாவிற்கு இடம்பெயர்தல், அடையாளம் மற்றும் கலாசார ரீதியாக ஆஸ்திரேலியாவுக்குத் திரும்புவது பற்றி நான் எப்படி உணர்ந்தேன் என்பதையெல்லாம் பற்றியது. அந்தப் பதிவானது Mamma Mia என்ற பிரபல வலைப் பதிவில் வெளியிடப்பட்ட பலரது பாராட்டுகளையும் பெற்றது. அதைத் தொடர்ந்து' என்னுள் ஒரு புத்தகம் இருக்கிறது மற்றும் என்னாலும் எழுத முடியும்' என்ற நம்பிக்கை கிடைத்தது. அந்த முயற்சியின் பயனாக ஏழு தசாப்தங்கள் மற்றும் நான்கு தலைமுறைகள் மற்றும் மூன்று கண்டங்கள் நாவல் சரித்திரமாக மாறும் என்று நான் உண்மையில் நினைக்கவில்லை . புத்தகத்தை எழுத தொடங்கியபோது நான் மிகவும் அப்பாவியாகவும் அறியாமையுடனும் இருந்தேன். பொதுவாக எழுத்தாளர்கள் ஒரே மூச்சில் உட்கார்ந்து புத்தகத்தை எழுதிவிடுவார்கள் என்று நினைத்திருந்தேன். அதனால் நான் உட்கார்ந்து ஒரு புத்தகம் எழுத முயற்சித்தேன். எனவே ஒவ்வொரு நாளும் தொடர்ச்சியாக எழுதி முதல் வரையின் முடிவுக்கு வந்தேன். அதைப் படித்தவர்கள் ' உங்களிடம் ஒரு நல்ல நடை இருக்கிறது ஆனால் கதை சுவாரஸ்யமாக இல்லை' என்று கூறினார்கள். எனவே நான் மீண்டும் முதலில் இருந்தே முயற்சி செய்ய வேண்டியிருந்தது. தொடர்ச்சியான இரண்டு வருடங்களில் முயற்சியின் பயனாக இந்த நாவலை எழுதிமுடிக்க முடிந்தது.

ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

எதிரொலி: உங்கள் இரு நாவல்களிலும் இதிகாசங்கள் குறிப்பாக மகாபாரதத்தின் தாக்கத்தை காணமுடிகிறது Songs of Sun God கர்ணனைப் பற்றியும், Chai time at Cinnamon Gardens கிருஷ்ணரைப் பற்றியும் பேசுகின்றன. உங்கள் நாவல்களில் அவற்றை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவம் என்ன? உங்கள் பெற்றோர்/ தாத்தா பாட்டியிடம் நீங்கள் கேட்ட கதைகளால் இந்தக் காவியங்களின் தாக்கம் உண்டானதென்று கூறலாமா ?

சங்கரி சந்திரன்: ஆமாம், நான் சிறுவயதில் இருந்தே இந்தக் கதைகளைக் கேட்டிருக்கிறேன். நாங்கள் சிறு குழந்தைகளாக இருந்தபோது, அமர் சித்ரா கதைப் புத்தகங்களைப் படிப்போம் . அதைப் படித்தும், கற்பனை செய்தும் மற்றும் அது தொடர்பான பகல் கனவுகள் கண்டும் வளர்ந்தேன். நீங்கள் உங்கள் மனதில் கதைகளை உருவகிக்கும்போது அந்த கதாபாத்திரங்களை மனதில் வரைந்து கொண்டு வேறுவேறு கதைகளை உருவாக்கிக்கொள்வோம் இல்லையா? அந்த வகையில் எனக்கு மகாபாரதம் நெருக்கமானது. ஏனோ , ராமாயணம் அந்த அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை.உங்களுக்குத் தெரியும்,மகாபாரதம் ஒரு பெரிய குடும்பக் கதை. அதிலுள்ள மிகப்பெரிய குடும்பம் மற்றும் அவர்களுக்கிடையேயான சிக்கல்கள்,போர். மற்றும் உடன்பிறப்புகளின் பிணைப்புகளில் கடமைப் பிணைப்புகளும் என்னை சிறுவயதிலிருந்தே மிகவும் கவர்ந்தன. குழந்தைப் பருவத்தில் இதனைப் பற்றியே யோசித்துக்கொண்டிருந்தேன், அதனால் இந்த புராணங்கள் என் எண்ணங்களிலிருந்தும், கதைசொல்லல்களிலிருந்தும் தொலைவில் இல்லை. எனவே இது என் சொந்தக் கதைசொல்லலில் மிகவும் இயல்பாகவே வருகிறது.

எதிரொலி: Songs of Sun God நாவலின் மிக முக்கியமான பாத்திரமான தாராவில் கர்ணனின் தாக்கம் தென்படுகிறதே ?

சங்கரி சந்திரன்: ஆம், தாரா கதாபாத்திரம் கர்ணனின் தாக்கம் தான். நான் சிறு வயதிலேயே கர்ணன் மீது பற்று கொண்டிருந்தேன். தாரா கதாபாத்திரம் முதலில் கிடையாது. அவள் இந்த நாவலை எழுதும் இறுதிக் கட்டத்தில் தானாகவே வெளிப்பட்டாள், அதன் பிறகு இந்த நாவலை தொடர்ந்து 20 முறை திரும்ப எழுதி தாரா கதாபாத்திரத்தைச் செருகினேன். எனது 40 ஆவது பிறந்தநாளையொட்டி ,இந்தப் புத்தகத்தை முடிக்க குடும்பத்தை விட்டு சிறிது காலம் என் தாய் வீட்டிற்கு சென்றேன். நான் உருவாக்கிய பாத்திரம் தன்னை முழுவதுமாக மாற்றி எழுதியது. ஒரு இரண்டாம் பாத்திரமாக இருப்பதற்குப் பதிலாக ஒரு முதன்மைக் கதாபாத்திரமாக வெளிப்பட்டுவிட்டது. மேலும் 15,000 கூடுதல் சொற்களோடு, ஏற்கனவே எழுதிய 120, 000 வார்த்தைகளை மீண்டும் எழுதினேன். அவளுடைய வாழ்க்கை இயல்பாகவே கர்ணனுடையது என்பதை நான் உணர்ந்தேன், அவள் கர்ணனை முழுமையாக உருவகப்படுத்தினாள். அந்தக் கதாபாத்திரத்தின் மீது எனக்கு எந்தக் கட்டுப்பாடும் விதிக்கமுடியவில்லை . அவள் தான் தன்னை எழுதினாள். ஏனென்றால் நான் அதைத் திரும்பிப் பார்க்கும்போது அந்தச் சொற்கள் என்னிடம் இருந்தன என்றாலும் அதனை எழுதியவள் தாராவே . அவள் தன் சொந்த விருப்பத்தின் படியே இந்த நாவலுக்குள் வந்தாள் .

எதிரொலி: உங்கள் நாவலில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை, ராவணனுடன் ஒப்பிட்டு ஒரு கதாபாத்திரம் சொல்லுமிடமுண்டு. அதுமட்டுமின்றி இந்த நாவலில் பல இடங்களில் விடுதலைப் புலிகளை, தாரா என்ற கதாபாத்திரத்தின் வாயிலாக நீங்கள் மிகத் தைரியமாக விமர்சித்திருக்கிறீர்கள். இது தொடர்பில் தமிழ் வாசகரிடமிருந்து ஏதேனும் ஆட்சேபனை வந்ததா ? ஒரு எழுத்தாளராக பிரபாகரன் பற்றி உங்களுடைய பார்வை என்ன ? நீங்கள் முன்பே சொன்னது போல, Songs of sun God நாவல் இலங்கைத் தீவில் நடந்த 70 வருட வரலாற்று நிகழ்வுகள் மற்றும் அரசியல் நிகழ்வுகளின் சாத்தியக்கூறுகள் வரலாற்றை வேறுவிதமாக எவ்வாறு மாற்றியிருக்கலாம் என்பதை பற்றி பேசுகிறது. ஆயுதப்போருக்குப் பதிலாக, அகிம்சைப் போராட்டம் நடத்தியிருந்தால் ஒருவேளை விளைவுகள் வேறாக இருந்திருக்குமா?

சங்கரி சந்திரன்: மேற்கத்திய வாசகர்களுக்கு பிரபாகரன் குறித்து எந்தவிதமான உணர்ச்சிகரமான பிடிப்பும் கிடையாது. ஆனால் தமிழர்களாகிய எல்லோருக்கும் அவர் மீது உணர்வுபூர்வமான பிடிமானம் அதிகம் .நீங்கள் வெளியில் இருந்து பார்த்தால், போராட்டத்தின் தார்மீகம் மிகவும் சிக்கலானது.நீங்கள் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக அல்லது நோக்கங்களை அடைவதற்காகக் கடைபிடித்த தார்மீக உயர்நிலைகளை அடிக்கடி இழந்துவிட்டதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஒரு எழுத்தாளராக பிரபாகரனின் பல்வேறு பக்கங்களை மற்றும் பார்வைகளை முன்வைப்பதே எனது நோக்கம். நாவலில் வரும் தாரா கதாபாத்திரம் பெரும்பாலான நேரம் அரசியலுடன் சம்பந்தப்பட்டுள்ளது. புலிகளின் தலைமையின் குறிப்பிட்ட தார்மீக முடிவுகளிலிருந்து விலகி நின்றே தன்னால் முடிந்த நன்மைகளை மக்களுக்குச் செய்கிறாள். வெளிநாட்டில் வாழும் சுழல் நாற்காலி பாதுகாப்பாக வாழ்ந்துவிட்டு ஈழப்போராட்டத்தின் தார்மீகத்தை இப்பொழுது விமர்சிக்கிறார்கள், தாயகத்துக்காகப் போராடிய 14 வயது சிறுவர்களின் மனநிலையை மதிப்பீடு செய்து தீர்ப்பளிக்கிறார்கள்.

பிரபாகரனின் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்புமுனைகள் பற்றி நமக்கு எதுவும் முழுமையாகத் தெரியாது. 2002-2004 பேச்சுவார்த்தைகளை அவர் ஏற்றுக்கொண்டிருக்கலாமா? அவர்கள் நேர்வே - ஐப்பான் முதலான நாடுகள் கொண்டுவந்த சமாதான உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டிருக்க முடியுமா? எங்களுக்கு இப்போது எதுவும் தெரியாது. ஆயுதப் போராட்டமின்றி அகிம்சை போராட்டங்கள் என்ன சாதித்திருக்குமென்றும் சொல்லத் தெரியவில்லை, ஏனெனில், அமைதியான கூட்டாட்சிக் கட்டமைப்பு அல்லது சுய அதிகாரம் பெற்ற தமிழ் மாகாணத்திற்கான உண்மையான விருப்பத்திற்கு இந்த இலங்கை அரசாங்கம் ஒருபோதும் இணங்கியிருக்கப் போவதில்லை.

இந்த அரசாங்கம் அகிம்சைப்போராட்டம் நடத்தினால், என்ன பதில் அளித்திருக்கும் என்பதெல்லாம் இனப்படுகொலைகள் மூலம் நமக்கு நன்றாகத் தெரிகிறது இல்லையா ? இறந்தவர்கள் இறந்துவிட்டார்கள். நாம் என்ன செய்யமுடியும்? . இப்பொழுது உட்கார்ந்து சிந்தனைப் பரிசோதனை செய்து பார்ப்பதில் என்ன லாபம் ? ஆயிரமாயிரம் குழந்தைகளை இழந்த பெற்றோருக்கு எந்த ஆறுதலும் இல்லை.

எதிரொலி: உங்கள் நாவலில் இனப்பாகுபாடு பற்றிப் பேசியிருக்கிறீர்கள். ஆனால் நமது தமிழ்ச் சமூகத்தில் இன்னும் சாதிப் பாகுபாடு உள்ளதே . "Songs of Sun God" என்ற நாவலில் நளா என்ற கதாபாத்திரம் மற்றொரு வேலைக்கார கதாபாத்திரமான சேந்தனின் சாதியை அவரது நிறத்தாலும் தோற்றத்தாலும் அடையாளம் காட்ட முயல்கிறது. நாம் மேற்கத்திய நாடுகளில் குடிபெயர்ந்திருந்தாலும் நமது சாதிய அமைப்பைச் சுமக்கவே செய்கிறோம். சாதிவெறியைப் பற்றி உங்கள் புத்தகங்களில் நீங்கள் அதிகம் பேசவில்லை. ஒரு எழுத்தாளராக, அது பற்றி உங்கள் கருத்து என்ன?



சங்கரி சந்திரன் : நான் அதனை எழுதவில்லை.ஏனென்றால் எனக்கு சாதியைப் பற்றி போதுமான அளவு தெரியாது.எனது நாவல்களில் ஏற்கனவே நிறையப் பிரச்சினைகளை பற்றி பேசியிருக்கிறேன். அடுத்த தமிழ்த் தலைமுறையில், என் மகள் வேறு சாதியில் இருந்து ஒரு தமிழ் நண்பனை வீட்டிற்கு அழைத்து வந்தால், அவரது சாதியை என்னால் கண்டுபிடிக்க முடியாது. அது எனக்கு ஒரு பொருட்டுமில்லை. ஆனால் எனது அம்மாவால் சொல்ல முடியும். என் அம்மாவுக்கு சாதி குறித்து ஏதேனும் பிரச்சினை இருந்தால், அவ்வாறு பாகுபாடு பார்ப்பதில் வெட்கம் இல்லையா என்பதே எனது கேள்வியாக இருக்கும். சாதிய முறை ஒரு அடக்குமுறை அமைப்பு. அதன் தோற்றம் 1000 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வேளை பயனுள்ளதாக இருந்திருக்கலாம்.அதை அறியும் அளவுக்கு எனக்கு அதைப் பற்றி தெரியாது. நாம் பண்பாட்டு வழிகளில் நம்மை ஒருங்கிணைக்க வேண்டுமே ஒழிய , சாதி வேறுபாடுகளால் நம்மை நாமே பிரித்துக்கொள்ளாமல் இருக்க வேண்டும். சாதிவெறி இன்னும் நம் புலம்பெயர்ந்த நாடுகளில் இருக்கிறது.ஆனால் இறுதியில் அது அழிந்துவிடும் என்றே சொல்வேன் . பெரியவர்களாக மேற்கத்திய நாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களுக்கு சாதி அமைப்பு மிகவும் முக்கியமானது. ஆனால் இங்கேயேபிறந்து வளர்ந்த அடுத்த தலைமுறையைப் பார்க்கும்போது, அவர்களுடைய மூத்த உறவினர்கள் முடிவுகளை எடுக்கும் வலுவான நிலையில் இருந்தால் மட்டுமே சாதியும் ஒரு பிரச்சினையாக இருக்கும். அவர்களும் இறுதியில் ஒருநாள் இறந்துவிடுவார்கள். அப்போது அந்த அமைப்பைப் பற்றிக் கொண்டிருக்கும் தமிழ்ச் சமூகத்தின் மனநிலையும் அழிந்து போகும். அதே போல் பழைய வெள்ளை இனவெறியர்களும் ஒருநாள் மறைந்து போவார்கள். அடுத்த தலைமுறையினர் சாதிய அமைப்பிலிருந்து மேலும் விலகிச் செல்வார்கள் .அவர்கள் மேற்கிலிருந்து வேறு வழியைக் கற்றுக் கொள்வார்கள். மேற்கத்திய நாடுகள் தங்களுக்கென்று ஒரு வர்க்க அமைப்பைக் கொண்டுள்ளன. பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை என்பதை அறிந்து கொள்வார்கள் . எதிர்காலத்தில் புலம்பெயர்ந்த தேசத்தில் இந்தநிலை மாறிவிடும் என்று நினைக்கிறேன் . இது முந்திய தலைமுறை சார்ந்த பிரச்சினை மட்டுமே. ஆனால் புலம்பெயர்ந்த உயர் சாதியினர் பலர் இன்னும் இந்தச் சாதிய அமைப்பை தொடர்ந்தும் கடைப்பிடிக்கிறார்கள் என்ற கருத்தில் நான் உடன்படுகிறேன்.

எதிரொலி: தமிழர்களின் விடுதலைக்கான போராட்டத்திலும் சாதிய அமைப்பு தாக்கம் செலுத்தியதா?

சங்கரி சந்திரன்: ஆம் கண்டிப்பாக... சமூக வர்க்க ஏற்றத்தாழ்வு மற்றும் சாதிப் பாகுபாடுகள் போராட்டத்தில் தாக்கம் செலுத்தின . பெரும்பாலான புலிகள் தாழ்த்தப்பட்ட சாதி மற்றும் ஏழ்மை வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று நான் நினைக்கிறேன். ஏதோ ஒரு வகையில் விடுதலைப் போராட்டம், அவர்களை ஒருங்கிணைக்கவும், வேறுபாடுகளை அகற்றவும் சில வழிகளில் உதவியது .எல்லோரும் சமம் என்று நினைத்தனர், அனைவரும் தங்கள் உயிருக்காக ஏற்றத்தாழ்வுகளை மறந்து ஒற்றுமையுடன் போராடினர் .

எதிரொலி: உங்களின் முதல் நாவலில் ஆஸ்திரேலிய வாடை இல்லை என்று பதிப்பகங்கள் கூறின என்று உங்கள் பேட்டிகளில் படித்திருக்கிறேன் .இதனால் தங்கள் அடுத்த நாவலில் Chai time at Cinnamon Gardens இல், நிக்கி, கரேத் மற்றும் நாதன் போன்ற வெள்ளைக் கதா பாத்திரங்களை சேர்த்தீர்களா?

சங்கரி சந்திரன்: ஆம். இந்த நாவல் ஒரு எழுத்தாளராக எனது முதிர்ச்சியின் முன்னேற்றம் என்றே நினைக்கிறேன் . எனக்கு இலங்கைப் பின்புலம் சார்ந்த கதை எழுத நன்றாகத் தெரியும். அதே நேரத்தில் ஆஸ்திரேலிய பின்புலம் சார்ந்த கதை எழுதவும் எனக்கு நன்றாகத் தெரியும் . எனது முதல் கதையில் இலங்கையின் கடினமான இனப்பிரச்சினைகளை தமிழ்க் கண்ணோட்டத்தில் ஆராய்வது வசதியாக இருந்தது. ஏனெனில் அந்தக் கண்ணோட்டத்தில் நான் மிகவும் எளிதாக எழுத முடியும் .

ஆஸ்திரேலியாவில் நிறம் மற்றும் இனம் பற்றிய உரையாடல்களுக்கான கதவைத் திறப்பது மிகவும் கடினம், அந்தக் கதையின் ஒரு பகுதியைச் சொல்ல அவர்களின் வாழ்க்கையையும் சொல்ல வேண்டும். நீங்கள் வெவ்வேறு கண்ணோட்டங்களைக் கொண்டிருப்பினும் பழுப்பு வாசகருக்கும், வெள்ளை வாசகருக்கும் வெள்ளையர்களின் கண்ணோட்டத்தை சொல்ல வெள்ளையர்களையும் பாத்திரக் குழுவிற்குள் அனுமதிக்க வேண்டும். வெள்ளை வாசகருக்கு அவர்களின் பார்வை மற்றும் பழுப்பு நிற பாத்திரங்களின் பார்வை ஆராயப்படுவதையும் இணைக்க வேண்டும். அதே நேரத்தில் பழுப்பு நிற நபரை ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்திற்கு அழைத்துச் செல்லும் இனவாதியாகக் காட்டமுடியாது .அந்தச் செயலை உற்சாகத்துடன் செய்ய ஒருவர் வேண்டும் . பின்னர் அவர் வெள்ளையாக இருக்க வேண்டும் . துரதிர்ஷ்டவசமாக, கரேத் வெள்ளையாகவே இருக்க முடியும் .

எதிரொலி: உங்கள் இரு நாவல்களும் இலங்கையில் நடந்த இனப்படுகொலையைப் பற்றி பேசுகின்றன. பல தமிழ் எழுத்தாளர்கள் இலங்கையில் நடந்த இனப்படுகொலை பற்றி தமிழில் எழுதுகிறார்கள். ஆனால் தமிழ் மொழியில் எழுதுவதால் அதில் உலகிலுள்ள மற்ற நாடுகளுக்கு செல்லும் வாய்ப் பில்லை . ஆங்கிலத்தில் நன்றாக எழுதக்கூடியவர்கள் இனப்படுகொலை பற்றி எழுதுவதில்லை.மேற்கத்திய நாடுகளுக்கு தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து 30-40 வருடங்களாகின்றன. மேற்கத்திய மொழிகளில் நமது பிரச்சினைகள் பற்றி குறைந்தது 1000 புத்தகங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது இன்னும் நடக்கவில்லை. அது ஏன் நடக்கவில்லை என்பதுதான் எனது கேள்வி. புலம் பெயர்ந்த உலகத் தமிழ் மக்கள் ஏன் தம் குழந்தைகளை நமது துன்பங்களை பற்றி எழுத அனுமதிக்கவில்லை ? யூதர்களைப் போல நாம் ஏன் நமது துன்பங்களை இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்லவில்லை? இது நமது தோல்வி இல்லையா ?.

சங்கரி சந்திரன்: நாம் அதிகமாக எழுத வேண்டும் என்று நினைக்கிறீர்களா ? ஆம், நாம் இன்னும் அதிகமாக எழுத வேண்டும். வெள்ளை எழுத்தாளர்களும் என்னிடம் நீங்கள் ஏன் எப்போதும் இனப்பிரச்சினையைப் பற்றி எழுதுகிறீர்கள் ?என்று கேட்கிறார்கள். சமீபத்தில் நடந்த சிட்னி எழுத்தாளர் விழாவில், என்னிடம் இதேபோன்று போரைப் பற்றி ஏன் எழுத வேண்டும் என்ற கேள்வி வந்தபோது, "நான் ஒரு ஒரு தமிழிச்சி. எங்கள் துன்பங்களைப் பற்றி எழுதுவதை விட வேறு வழியில்லை. அந்தப் போரைப் பற்றி எழுதும் கடமை மட்டுமே எனக்கு இருக்கிறது. அதுதான் எங்களது வாழ்க்கை. அதுதான் எங்களின் துன்பம். அதுதான் எங்களின் போராட்டம். அதனால் தான் சொந்த நாட்டை விட்டு வெளியேறினோம் . போரைப் பற்றி சிறிதும் இல்லாமல் தமிழ்க் குணம் அல்லது குடும்பம் பற்றி எவ்வாறு எழுதுவது ?. ஆம். எனவே நாங்கள் இன்னும் அதிகமாக எழுத வேண்டும் என்பதில் நான் உடன்படுகிறேன்.

எதிரொலி: 'Songs of Sun God' நாவலில், தாரா இராணுவ வீரர்களால் சித்திரவதை செய்யப்படும் பொழுது, அவள் தொற்று நோய்களை அகராவரிசையில் சொல்லத் தொடங்குவாள்: அமீபிக் வயிற்றுப்போக்கு, சிக்கன் பொக்ஸ், டெங்கு, டிப்தீரியா, முதலியன இராணுவம் சித்திரவதை செய்வதை விரிவாகக் கூறுவதற்குப் பதிலாக வாசகர்களை தொற்று நோய்கள் மூலம் கற்பனை செய்து பார்க்க வைப்பது ஒரு சிறந்த யுக்தியாகும். கொலைகார ராணுவத்தினர் தொற்றுக்கிருமிகள் போல தாராவின் உடலில் ஊடுருவ முயற்சி செய்கின்றனர் எனக் கற்பனை செய்யமுடியும். நாவலின் இந்தப் பகுதி என்னால் மறக்க முடியாதது. முழு நாவலினதும் முக்கியமான தருணம் இதுதான். இந்த யுக்தியைக் கையாளும் எண்ணம் எவ்வாறு வந்தது?. உங்கள் குடும்பம் மருத்துவப் பின்னணியைக் கொண்டது என்பதாலா?

சங்கரி சந்திரன்: ஆம், என் பெற்றோரும் ,தாத்தாவும் மருத்துவர்கள் . எனவே மருத்துவ மொழி மற்றும் அது சார்ந்த மருத்துவச் சிந்தனைகள் அனைத்தையும் மிகவும் சரளமாகவே கேட்டு வளர்ந்திருக்கிறேன் . மேலும் , எனது வழக்கறிஞர் பணிக்காக தொடர்ச்சியாக வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்காக சமூக நீதித் துறையில் பணியாற்றியுள்ளேன். எனவே அந்தக்கொடுமைகளை எனக்கு நன்றாகவே தெரியும். எனவே அதைப் பற்றி எழுதுவது எனக்கு முதன்மையானது. இந்தக் கதைகளை நான் நினைவில் வைத்திருக்கிறேன் , அதைப் பற்றி யோசிக்கிறேன், அவர்கள் என்னிடம் சொல்லாதபோதும், நான் ஏப்போதும் மக்களைப் பார்த்து அவர்களின் கதை என்ன என்று அலைந்து கொண்டிருப்பது போல் உணர்கிறேன். ஆனால்அதனைப் பற்றி எழுதும்போது, வாசகர்கள் அந்தக் கொடுமைகளை போதுமான அளவு உணர வேண்டும் என்று நான் விரும்பினேன். திகைப்பு ,பதைபதைப்பு, மீறல் மற்றும் மிருகத்தனத்தின் உணர்வுகளையெல்லாம் வாசகர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் . நாங்கள் ஒருவரையொருவர் அப்படிச் செய்யக்கூடாது என்று குறைந்தபட்சம் ஒரு கட்டத்தில் சொல்ல முடியும். நாம் அதை ஒருவருக்கொருவர் செய்கிறோமா? இந்தக் கொடுமைக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் . அதற்கு நியாயம் கிடைக்க வேண்டும் .

எதிரொலி: Chai time at Cinnamon Gardens நாவலில் பிரதான கதாபாத்திரமான கரேத் என்னை மிகவும் தொந்தரவு செய்தது. அவரது தனிப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அந்த பிரச்சினைகளுக்கான அவரது எதிர்வினை பேரழிவு நிகழ்வுகளுக்கு வழிவகுத்தது. கரேத்தின் செயல்களை ஹிட்லர், முசோலினி அல்லது வேறு சர்வாதிகாரிகளுடன் இணைத்து பார்க்க முடியும் . அவர்களின் தனிப்பட்ட துயரங்கள் பேரழிவு நிகழ்வுகளுக்கு இட்டுச் செல்கின்றன, இல்லையா?

சங்கரி சந்திரன் : ஆமாம் . என்வே, நம் வாழ்வில் நடக்கும் சிறிய செயல்கள் வெளித்தோற்றத்தில் சிறியதாகவும் சில சமயங்களில் பெரிய விஷயங்களாகவும்இருப்பமை எவ்வாறு நம்மை ஒரு குறிப்பிட்ட திசையில் கொண்டு செல்கின்றன என்பதைப் பற்றி எழுதுவதில் நான் ஆர்வமாக உள்ளேன். அந்தச்செயல்கள் ஒரு மனிதனை எவ்வாறு உருவாக்குகின்றன, அவன் செய்யும் காரியங்களை எவ்வாறு பாதிக்கின்றன என்று எழுதலாம். அதன்பின் ஒரு கட்டத்தில் அவை அவனது கட்டுப்பாட்டை மீறி அவனது வாழ்வினைப் பாதித்து பேரழிவாக மாறுகின்றன. இரண்டு கோணங்கள் இருக்கலாம், இல்லையா? ஒன்று லாரன்ஸ் இறக்காமலோ, நிக்கியுடன் விவகாரத்து ஆகமலோ இருந்திருக்கலாம். அந்த நேரத்தில் காரெத் கேப்டன்குக் சிலையைப் பார்க்கவில்லை என்றால் என்ன செய்வது?

வாழ்வின் பகடையாட்டத்தில் சிறிய விஷயங்களில் ஏதேனும் ஒன்றை நீங்கள் ஒரு காயை வெளியே நகர்த்தினால், வேறு என்ன நடந்திருக்கும்? என் கணவர் என்னிடம் சொன்னார், 'எல்லோரும் இனவாதிகள். மோசமான மக்கள் மட்டும் இனவாதிகளல்லர். எல்லோரும் இனவெறியர்கள்' என்று. மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்... Songs of Sun God நாவலிலும் ஒவ்வொரு அரசியல் கதாபாத்திரமும் எத்தனை வழியில் வேறுவகையான முடிவுகளை எடுத்திருக்க முடியும்? போர் அரங்கிலும், அரசியல் அரங்கிலும் எத்தனையோ வகைகளில் முடிவுகளை மாற்றியிருக்க முடியுமில்லையா ? அந்த வேறு வகையான முடிவுகள் யுத்தங்களை தவிர்த்திருக்கலாம்.

எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றியிருக்கவும் முடியும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

“இலங்கையில் நடந்த போரையும், இனப்படுகொலையையும் எழுதுவது எனது கடமை”

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிரொலி: ‘எலியின் மரண துன்பத்தையும் பூனையின் பசியையும் ஒரே நேரத்தில் சொல்லும் கதையே நல்ல கதை’என்று பொதுவான வழக்குண்டு. Songs of Sun God நாவலில் நளா, ப்ரியா மற்றும் தாரா போன்ற கதாபாத்திரங்களெல்லாம் தமிழர்களின் பார்வையில் கதையைச் சொல்கின்றன. அந்த நாவலில் நந்தனின் மனைவி (பெரேரா) என்ற சிங்களக் கதாபாத்திரம் இருந்தாலும், அவர்களின் (சிங்களவர்களின்) பார்வை இந்த நாவலிலில்லை. இரண்டு கலாசாரங்களின் கலந்துறவு, சிக்கல்கள், பிரச்சினைகள் பற்றிச் சொல்வதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டதாக எனக்குப்படுகிறது. சிங்களக் கண்ணோட்டத்திலும் கதையைச் சொல்லாமல் தவிர்த்தமைக்கு பிரத்யேக காரணம் ஏதேனும் உள்ளதா?

சங்கரி சந்திரன்: இந்த நாவலின் வரும் முக்கியமான கதாபாத்திரங்களுக்கு என் குடும்பத்தில் முன்மாதிரியுண்டு. தாரா முற்றிலும் கற்பனையானது. பிரியா கதாபாத்திரம் எனது அம்மாவின் குணாதிசயத்தின் அடிப்படையிலானது. என் தாய்க்கு ஒரு சிங்களப் பெண்ணை மணந்த ஒரு சகோதரர் இருக்கிறார். இந்த நாவலின் முதல் வரைவில் அவர்களைப் பற்றி எழுதியிருந்தேன். அது மிகவும் அதிகமாக இருந்தது. 135,000 சொற்களுக்கு மிகுதியாக இருந்தது. தமிழ்- சிங்களத் தம்பதிகள், அவர்களின் காதல் கதை ,வாழ்க்கை மற்றும் மற்றும் வேறு இனத்தை சேர்ந்த ஒருவரை திருமணம் செய்து கொள்வதன் சிக்கல்களையெல்லாம் எழுதினால் அது மட்டுமே ஒரு தனியான முழு நாவலாகி விடும். அதனால் தான் அவர்களின் ’கௌரவ வேடம்’மட்டும் போதும் என்று தீர்மானித்து அந்த மாற்றுப் பக்கங்களை எழுதவில்லை.

எதிரொலி : உங்கள் இரு நாவல்களிலும் வரும் ஆண் கதாபாத்திரங்கள் ராஜன், ஜாஹிர், ரூபன் மற்றும் பலர் எந்த குறைகளுமின்றி உதாரண புருஷர்களாக இருக்கிறார்கள், இது வேண்டுமென்றே செய்யப்பட்டதா அல்லது அந்தக் கதாபாத்திரங்கள் குடும்ப உறுப்பினர்களின் தாக்கத்தினால் அவ்வாறு அமைந்து விட்டதா ?

சங்கரி சந்திரன்: ஒருவேளை நான் வளர்ந்த சூழ்நிலையின் தாக்கம் இருந்திருக்கலாம். எனது பார்வை மிக நேரானதாகவும், ஒருவட்டத்திற்குள் அமைந்துவிட்டதாகவும் இருந்திருக்கலாம். ஒருவேளை வரும் காலங்களில் மனிதர்களின் இழிந்த பக்கங்களையும் எழுதுவேன் என்று நினைக்கிறேன். நான் வயதாகும்போது நம் இயல்பின் தோல்விகளை மேலும் ஆராயும் நம்பிக்கை எனக்கு இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

லெபனான் சமூகத்தை சேர்ந்த முஹம்மது அகமது ஒரு சுவாரஸ்யமான எழுத்தாளர் . அவர் லெபனான் மக்களின் மிகவும் கீழ்ந்த பக்கத்தை நமக்கு காட்டுகிறார். அவர் கூறுவார், “சரியான லெபனானின் சரியான கதையை நாம் எழுத வேண்டும் என்றால் முடிந்தவரை நேர்மையாக எழுத வேண்டும்” என்று. எனது நாவல்களில் நான் என்ன செய்ய முயற்சிக்கிறேன் என்பதை விட அந்த நன்மையின் இடைவெளியில் தங்கியிருப்பதை நான் மிகவும் வசதியாக உணர்ந்தேன் . முதல் நாவலில் உள்நாட்டுப் போர் மற்றும் அநீதியைப் பற்றிச் சொல்ல முயற்சித்தேன். பின்னர் இனம் மற்றும் அடையாளம் குறித்த சிக்கல்களை எனது இரண்டாவது நாவலில் கூற வேண்டுமென்பதே எனது நோக்கமாக இருந்தது. அதைவிடுத்து என் கதாபாத்திரத்திற்கு பல தோல்விகளைக் கொடுத்து வாசகரை மையகருத்திலிருந்து திசை திருப்ப நான் விரும்பவில்லை.

எதிரொலி: உங்கள் அடுத்த படைப்புகள் பற்றிய திட்டங்கள் என்ன?

சங்கரி சந்திரன்: என்னுடைய அடுத்த நாவல், சிறைச் சாலையை மையமாக கொண்டு எழுதவிருக்கிறேன். இந்த நாவலில் மனித இயல்பின் சிதைவுகள் பற்றி மிகக் குறைவாகவே சொல்லப்படும். ஒரு சதித்திட்டத்தால் இயக்கப்படும் நாவலாகவும் இருக்கும் .தற்போதைய திட்டம் இந்த ஆண்டு



இறுதிக்குள் முடிப்பதுதான்.ஆனால் அதற்குப் பிறகு, அடுத்தது என்ன என்பதில் மிக ஆர்வமாக இருக்கிறேன். அதனால்தான் நான் அசோகமித்திரனின் கதைகளைப் படிக்க விரும்புகிறேன். குறிப்பாக ஒரு குறுநாவலை 40,000 சொற்களுக்குள் எழுத விரும்புகிறேன்.

எதிரொலி: உங்கள் இரு நாவல்களும் யாழ். நூலக எரிப்பு பற்றியும், அங்கு லட்சக்கணக்கான புத்தகங்கள் அழிந்ததைப் பற்றிப் பேசுகின்றன. 40 ஆண்டுகளுக்கு மேலாகியும், புலம் பெயர்ந்த நாடுகளில் யாழ். நூலகம் போன்ற நூலகத்தை தமிழ்ச் சமூகமாகிய நம்மால் ஏன் கட்ட முடியவில்லை ?. ஏன் செய்யத் தவறுகிறோம்? நாம் புலம் பெயர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் பெரிய கோவில்களை கட்டுகிறோம்.. நமது பெருமையை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல முடியாமல் போனதாகக் கருத வேண்டுமா? கோவில்கள் தேவை தான். ஆனால் கோவில்களை விட நூலகங்கள் தான் அவசியமானவையல்லவா?

சங்கரி சந்திரன்: கோவில்கள் கட்டுவதில் எங்களுக்கு ஒருவித அர்ப்பணிப்பு உள்ளது என்பதை நானும் முழுமையாக ஒப்புக்கொள்கிறேன். அதேவேளை, கோவில்கள் சார்ந்த நம்பிக்கையின் முக்கியத்துவத்தையும், சமூகத்தில் மக்களை ஒன்றிணைக்கும் பணியையும் நான் புரிந்துகொள்கிறேன், நீங்கள் முன்பு என்னிடம் கேட்டீர்கள், நாங்கள் ஏன் எங்கள் கதைகளை அதிகம் எழுதவில்லை? இந்தக் கதைகளை எழுதுவதற்கு நாம் ஏன் நம் குழந்தைகளை ஊக்கப்படுத்தவில்லை? என்று. பொதுவாக தமிழ் மனதில் சில விஷயங்களுள்ளன., அதாவது எல்லோரும் மதிக்கக்கூடிய மற்றும் பாதுகாப்பான தொழிலைச் செய்து தமது இருப்பை நிலைப்படுத்திக்கொள்வது .

இரண்டாவதாக, துன்பத்தில் இன்ப நிலை காணும் நிலையில் இருந்து கொள்வது . அதைப் பற்றி வெளியில் பேசாமல் இருந்துவிடுவது., இவ்வாறான சூழ்நிலையில் நாம் யூத மக்களைப் பார்க்க வேண்டிய அவசியமிருக்கிறது. எனவே , உங்கள் சொந்தக் கதையைப் பற்றி நீங்கள் பெருமிதம் கொண்டால்,அந்தக் கதைகளை புற உலகிற்கு அதிகமாகக் கொண்டு சொல்ல வேண்டும். அதைச் செய்த ஒரு நபராக நான் இருப்பதில் பெருமைப்படுகிறேன், ஆனால் என்னைப் போன்ற பலர் இருக்கிறார்கள் ஆங்கிலத்திலும், தமிழில் இன்னும் சிறப்பாக எழுதக்கூடியவர்கள் . அவர்களும் எழுதவேண்டும்.

எதிரொலி : உங்களுக்கு பிடித்த எழுத்தாளர்கள் யார் , அவர்களைப் போல் நீங்கள் எழுத வேண்டும் என்று உங்கள் மனதில் குறிப்பாக யாரேனும் இருந்தார்களா ?

சங்கரி சந்திரன்: Liane Moriarty-யின் Big Little Lies மற்றும் Kamila Shamsie யின் Home Fire ஆகிய இரண்டு நாவல்களிலிருந்து எனக்கு உத்வேகம் கிடைத்தது. இரண்டு நாவல்களும் பல்வேறு கதாபாத்திரங்களின் கண்ணோட்டத்தை எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு கண்ணோட்டத்திலும் கதையை முன்னோக்கி நகர்த்தி, பிறர் வாழ்வில் நிகழும், உங்களுக்குத் தெரியாத அடிப்படைச் சோகங்கள் அல்லது எதிர்காலத் துயரங்களைக் குறிப்பிட்டு சொல்வனவாக அமைந்திருக்கும். அந்த வகையான கட்டமைப்பு எனக்கு மிகவும் பிடிக்கும், அதைச் செயற்படுத்துவது மிகவும் கடினம், இருவரும் அதை அற்புதமாக செய்திருப்பார்கள். Liane Moriarty-யின் நாவல் மிகவும் எளிதில் படிக்கக்கூடிய நாவல். இது வணிகத்தன்மை வாய்ந்த புனைகதை மூலம் ஆதுரமான சமூகச் செய்தியை வழங்குகிறது. பின்னாளில் மிகவும் பிரபலமான, வெற்றிகரமான தொலைக்காட்சித் தொடராகவும் இது எடுக்கப்பட்டது .

எதிரொலி : உங்கள் நாவல்களையெல்லாம் தமிழில் மொழிபெயர்க்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

சங்கரி சந்திரன்: ஆம், நிச்சயமாக. அப்படியான திட்டம் என்னிடம் இருக்கின்றது.

எதிரொலி : Chai time at Cinnamon Gardens நாவல் இன அடையாள சிக்கல்கள் மற்றும் இனவெறி பற்றி பேசுகிறது. “ஆஸ்திரேலியாவில் இரு வகையான இன மக்கள் வாழ்கிறார்கள். ஒன்று, ஆஸ்திரேலியர்கள் , மற்றவர்கள் புலம்பெயர்ந்தவர்கள்”. பல வருடங்களாக இந்த நாட்டில் வாழ்ந்தாலும் நாமென்றும் புலம்பெயர்ந்தவர்களாகவே கருதப்படுவோம். இதுவே நாவலின் அடிப்படை. எதிர்காலத்தைப் பற்றிய உங்கள் எண்ணங்கள் என்ன? எதிர்காலத்தில் நாம் ஆஸ்திரேலியர்களாக மதிக்கப்படும் வாய்ப்பு இருக்கிறதா ?

சங்கரி சந்திரன்: அது இன்னும் கேள்விகுறி தான். ஏனெனில் நாவல் வெள்ளையர்களுக்கு சவால் விடுகிறது. நீங்கள் இதுவரை எங்களை ஆஸ்திரேலியர்கள் என்று நினைக்கவில்லை. ஆனால் நாங்கள் ஆஸ்திரேலியர்களாக சிந்திக்க விரும்புகிறோம், நாங்கள் அவ்வாறு செய்யாவிட்டால், அதற்கு நீங்கள் எங்களை அனுமதிக்காதது தான் காரணம் . இவ்வாறான மனநிலையையே இந்த நாவலில் ஆராய விரும்பினேன், அது வெள்ளை மேலாதிக்கத்தின் இடத்திலிருந்து வந்தது என்று நினைக்கிறேன், உண்மையில் ஆஸ்திரேலியா ஒரு வெள்ளை நாடு. நாங்கள் இங்கு வந்தபோது சொன்ன பொய்கள் பற்றி கேள்வி எழுப்ப வேண்டிய கட்டாயம் எங்களுக்கு இருக்கிறது .

ஒரு எழுத்தாளர் மற்றும் வழக்கறிஞராக மனித இயல்பு மேன்மையடையும் என்று நான் எப்போதும் நம்புகிறேன். நம்மால் இன்னும் சிறப்பாகச் செய்ய முடியும் .நான் எப்போதும் நம்பிக்கையுடன் இருக்கிறேன். அந்த நம்பிக்கை இல்லாவிட்டால் நான் 4 குழந்தைகளைப் பெற்றிருக்க மாட்டேன். நன்மை, மகத்துவத்தை நோக்கிய நமது செயல்கள், அபிலாஷைகளை நான் உண்மையாக நம்புகிறேன். காலப்போக்கில் ஆஸ்திரேலிய அடையாளத்தை வலியுறுத்தும் வெள்ளை ஆஸ்திரேலியர்கள் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்ளக்கூடிய பரந்த மனப்பான்மை அடைவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

CHAI TIME WITH SHANKARI - ANANDAN VASANTHA KRISHNAMOORTHY

“ I am always hopeful that human nature can be better. we can do better ”

Shankari Chandran, who recently won Australia's highest literary award, the Miles Franklin Award, lives in Sydney. She has already written three novels, Songs of Sun God, Barriers, Chai time at Cinnamon Gardens. We have interviewed her online for Ethiroli. A summary of that interview follows.

Ethiroli : The famous Tamil Writer Asokamitran’s one of the short story “Turning Point” about a person trying to learn a manual car. The character in that story learn the manual car in a moment described as turning point. When did you get the turning point in your life that you wanted to be a writer?

Shankari Chandran : when I was young when I was in 11, I had a teacher called Mrs. Vandemark who made an extraordinary impact on my life. She believed in my ability and just in the playfulness of writing, then you could it write anything and everything. Experience the joy of that and then refine and improve it. when I was in about in my late teens, we went to Higginbotham’s bookstore in Chennai. it was selling books by authors who looks like me and who lead experience and their stories were from my own ancestral background. Because up until then in Australia and English literature, still not seeing myself particularly represented at all. In fact, I'm not saying myself represented at all.

The bookstore in India blew my mind that there was so many South Asian writers writing in English, and in the ancestors languages, so angle, phone and other and they were writing from diasporas and from within India, Hmm, and I remember it's some point reading them. The front cover of Time magazine said something like the Empire writes back and it's this moment where, , Indian writers were writing and they were really grabbing the international stage so it was moments like this where I just thought oh my god South Asians are writing and we are writing well and our experiences are being valued and are being read and being published and sold and I could do that. That is something that I Love to do. I’m academic. I got into law school. I loved words at the arts and so I chose a law school rather than medical school and got into a big law firm. I was able to move into the social justice centre very quickly, which was where I had to be because I like social purpose and social values.

There was only time to do that, and I was having children and studying a young family and so we have four children now. I have written a few short stories and essays as a young person could see that I was energized by writing in a way that nothing else energizes me. But did not have the It's in the courage to attempt anything longer and then we move back to Australia, I gave it a go because it was the first time that I had stepped out of the workforce. We had Fourth child. I took a break from being lawyer. Let me try to practice writing now and by then attempted songs of the sun god. My first book. Once you start writing, you can't stop. Yeah, that's you go.

Ethiroli : I have a follow-up question on this. I've seen here every writers starts their career by articles, short stories and then move on to writing novels,. But what you have done is that you did a long jump of getting into novel directly. Was there any reasons to write a novel as your first creation? Or is it like, you tried short stories before ? .

Shankari Chandran : I lived in London for 10 years. We took a plane from London to Buenos Aires. We stayed in Buenos Aires for two months. Just, we were taking a break before we were coming back to Australia and then the next plane from Buenos Aires to Sydney, I watched a film. This is a silly story, but it actually is a turning point for me. I watched the film called Julia and Julie about the blogger. She's a blogger called Julie who writes a blog about the, the famous American, chef and homemaker called Julia Childs. And the blogger has this moment where she says, a blog is just words. I've got words, I can write, I've got words and I was thinking on that plane journey. I was watching and thinking, I've got words. I have got words and so when I got to Australia I started to blog first so shortly since 500 words as a kind of journal that a public journal because I put it on a website and it was a public journal about our journey back home from London to Australia and the migration how I felt about the migration and the return and my Identity having lived abroad for so many years and having family and children, and culturally fitting back into Australia, It got published in Mamma Mia So, it was practicing and getting confident in my voice by writing these little blogs, my diary entries, even But then I knew that I got a book inside me and I felt that I wanted to try the book .And I didn't realize that it would become, seven decades and four generations and three continents that it would become this epic saga. I really didn't He would become that. But I am very and quite structured and a little bit obsessive. So I need to start at the beginning often and just go all the way through and get to the end and then stand back and look at something. And so for me, the beginning of that Sri Lankan story is very much in the 1930s, just before it independence and that sort of just that pre-dependence period that sets the country up for failure. And so that's where I wanted to start. because I was so naive and so ignorant that I thought that people simply sat down and wrote a book. And so I sat down and tried to write a book and I'm quite disciplined. So I would make sure that I was writing every day and , I got to the end of my first draft and people were saying you have a nice style but they're actually the story is not very interesting. So then I had to go back to the beginning and keep trying. So I know, I can see that. I jumped I went from zero to an epic. Over a couple of years.

Ethiroli : Both of your novels had significant influenced by Epics especially Mahabharat. The songs of Sun god talks about Karnan and Chai time cinnamon gardens talks about Lord Krishna. What are the significance to introduce them in your novels?. Is that these epics influence due to the stories you heard from your parents / grandparents ?

Shankari Chandran : Yeah, so I I have heard these stories since childhood. Right, when we were small children, we used to read Amar chitra story books. Then when we got older, we read the translation in the big form and different versions and so on. And I grew up reading it and imagining it and daydreaming about it. When you create stories in your head ,you are drawing from the first stories you heard. taking the characters and doing different things in your head. for me, whatever. Reason the Mah. Relates to me in a way that the Ramayana never did stakes are so high. It's such an epic, such a family saga. I have a very large family with cousins that I love so much. High with the drama of it and the bonds of duty in the bonds of mother and child and siblings. It meant so much more to me. I really just is, would fire up some of my so much of my childhood has been thinking about it and so, when I came to write songs of the sun god and even try to have it cinnamon gardens, , the at mythology is never far away from my thoughts or almost storytelling. So it



comes very organically and very naturally into my own storytelling and sometimes it was conscious.

Ethiroli : The most important character of the Songs of sun God novel Dhara also influenced by Karna ,isn’t it ?

Shankari Chandran : Yeah, the character of Dara. I had been obsessed with Karn a a young age. Yes, she really emerged in the final stages of writing, so I wrote this my whole finished, it then rewrote it, , 20 more times and inserted a character into it and then for my 40th birthday, my husband asked me. What would you like? And I said to him, I would like some time away from the family to finish this book. So I went to my mother's house, my parents house, they were away. And I just almost it's almost like you're going to a deep state of flow or meditation or connection with your higher self.

(Continued on page 16)

CHAI TIME WITH SHANKARI - ANANDAN VASANTHA KRISHNAMOORTHY

“ I am always hopeful that human nature can be better. we can do better ”

(Continued)

And the character that I have created completely rewrote itself. Instead of being a secondary character emerged as a primary character you and so it almost at the end of the week, I emerged as though I was for in a day is and I had written 15,000 extra words and rewritten the other 120000 words. And he and centralizing the character of Zara and in doing. So I realized part of the way through that her life was inherently that of his, that's what I really did. And then she fully embodied Karna and and he fully embodied her and I had very little control over that. She just wrote herself. And I didn't even I don't even understand it. However, half I don't even remember righting it because when I look back on it I'm like I think I even know I had those words. And so , she came into her own of her own will.

Ethiroli : I think that the next novel you wanted to be a more Australian. I believe that is the reason you have included Nikki, Gareth and Nathan characters into the novel to feel more Australian. Isnt it ?

Shankari Chandran : yeah. And I think you In this novel, it's also progression of my own maturity as a person. , when you often write what, , best first And I know the Sri Lankan story best way. I also know that the Australian story very well because that's the story I have lived here and in my maturity is a person. Is that I as I get older I feel more confident to explore those difficult issues. In Australia, through fiction, whereas in the first novel, I only felt comfortable to explore the difficult issues in srilanka from that tamil perspective because I can own in that perspective, very comfortably,

It's much harder to open the door to conversations about race in Australia, which are very relevant to me in my life to my children, their lives that to tell part of that story, you ought to tell that story. You need to allow the perspective of white people within it within the character group you and both for the brown reader and the white reader because they have different perspectives. Yeah. And so the white reader needs to be able to readily connect to see them their point of view, being explored as well as the point of view of the brown characters. And so again, they would deliberately created so Maya and Ruben with these emotional anchor of the story. Yeah. And everybody else. Yes, the brown person is not Be the racist that takes them to the Australian Human Rights Commission. The seed, you need the Happiness to drive that action and then he has to be white. Unfortunately, Gareth has to be white.

Ethiroli : Both of your novels talks about the genocide happened in Sri Lanka. There are many Sri Lankan tamil writers are writing about the genocide happening in Sri Lanka in Tamil but how far it will go to the global diaspora because of the language .The people who can write a well in good in English are not writing about the Genocide .. There are hardly few Tamil ethnic writers are writing about that . It has been 30-40 years since the tamil people migrated into Western countries. There should have been 100s of books should have been written about our issues in the western languages. But it did not happen yet. my question is more on why are we not writing about it? If you look at in global Tamil diaspora, Why we are not able to let our children to be a writer to write about our sufferings, right? As like Jews, why we didn’t transform our sufferings to younger generations? is it our failure?.

Shankari Chandran : Do you think that we should be writing more? Yes, we should be writing more. And I get asked and from white writers, why are you always writing about? Whereas and it's wonderful for me that you as a I say Tamil should be writing more because I agree. In the Sydney writer’s festival, when the question came to me, why do you have to write about the war? I am a Tamil person have no choice. I have only a duty to write about that war. That is our life. That is our suffering. That is our struggle. That is why we left.. So it is impossible for me to write about the tamil experience. Or to write about Tamil character or family without being someway about the war? Yeah. So I agree with you that we should be writing it more.

Ethiroli: In the Songs of Sun God novel , When Dhara was tortured by Army men. , She would start saying infectious diseases in alphabetical order: amoebic dysentery, chickenpox, dengue, diphtheria, etc.,. Its an excellent way of letting the readers imagine the torture of the army by the means of infectious diseases rather than elaborating. They are like germs and trying to infiltrate into Dhara’s body. This part of the novel that I wouldn’t forget anytime. This is the key moment in the entire book, right?. Where did you get that influence. is that due to your family from medical background ?

Shankari Chandran : yes, my parents and my grandfather is a doctor. Here was a lot of my uncles and aunties and cousins are a doctors as is often away. So have grown up, very perhaps reasonably concerned in All fluent in medical language and medical thinking. And also, I have worked in the social justice space for, , for for my whole legal career and their sort of work with victims of trauma and victims of terrible trauma.

and have worked it. I think I feel about the observation and the empathy. So writing is, is first and foremost to me, observing and remembering and reflecting on that and feeling it. I remember this stories and I think about it, and even when they're not telling me, I'm I feel like I'm always looking at people and wander about what their story is. And then because of my job as a social justice lawyer, I was already immersed in that the macro and micro level. And then medicine has been around me my entire life and the interest in it, and the respect for medicine. I have a lot of respect for medicine. But I did want us to feel enough of it. To get a sense of the horror and the violation and the brutality. Because we have to know that, right? we have to know that instead that we can at least at some point say you're not like we mustn't do that to each other. Do we do that to each other? It has to be an end to that. And there has to be justice for that .

Ethiroli : In the Songs of sun god , one particular character Gareth disturbed me a lot . His personal issues and his reaction to those issues led into catastrophic events. I can connect Gareth into Hitler ,Musolini or any other dictators. Their personal tragedies leading into catastrophic events, right?

Shankari Chandran : Yeah. So I am intrigued by the small seemingly small and sometimes big things that happen in our lives that set us in a particular direction. I was fascinated by what it is. That makes a man And and do the things that he does and then how at what point does it actually snowball out of his control and gather its own momentum? That becomes catastrophic. And because there's just two parts, right? One is maybe it's Laurence hadn't died or maybe if Nicki hadn't had an affair. He, , or what if he just hadn't seen the statue at that time. Yeah that moment. Yeah. Right that moment. It's the confluence of his emotional state at that time when he sees that statute. And he's primed already by the death of his child. And now he's super primed by the, the departure of his wife. Yeah. So, any one of those little things I could Domino is if you moved one piece out, what might have happened differently? And my husband was saying to me, , you want people to understand that everybody is racist and everybody, it could be racist and if you make him into a bad person, it enables the reader to dismiss and divorce themselves racism by say only back. Are racists, Where's actually? The truth is even good. People are racists and even good people do. And I love the this through almost like the thought project is that in in one person's life and then you extrapolate that out to a country. In the Songs of Sun God novel , how many parts along the way, could we have made a different decision? Yes, could different, , in the, in the theatre of war and the theatre of politics? Could anyone of those actors? What about me right done in different? And how many lives might have been saved?

Ethiroli: A good story is one that simultaneously tells the death sufferings of a mouse and the hunger of a cat. In those songs of sun god novel talks from the Tamil’s point of view esp, Nala, Priya and Dhara. Though there is a Sinhalese character Nandan’s wife (Perera) in that novel but I couldn’t find their point of views , esp. the two cultures interaction. Is there any reason why their views are not captured at all in that? Was it intensely left it out?

Shankari Chandran : the original story out of this store of this novel, it's actually follows certain characters that people in my family. Dhara is entirely fictional. The prayer is based simply character personality wise, to my mother. my mother has a brother Who married a Sinhalese lady. I had the initial drafts followed that sort of pattern. When I finished my writing. It was a 135000 words and so I had to decide who Needs to be more fully realized .It was too much. Like, if I was to try to make that story of the tamil-sinhalese couple and their lives as well as their love story, and what it means to marry someone from the other side. I mean, that's a whole novel. And so I just had to decide as unsatisfying as it is and to decide that they were actually, like, guest appearances. That’s it.

Ethiroli : As I understand ,the novel’s main theme is to represent the 70 year old history and the genocide. I felt that the entire story was told from one side view and there were characters from the other side could have been represented well to get a holistic view.

Shankari Chandran : Yeah, no I didn't even write in the first place because of the lengthiness. I agree with you that this, it is more to be told then.

Ethiroli : The male characters in your both of your novels ie Rajan, Zahir, Ruben and etc., are near perfect individuals, Was it intentional or is it because of those characters were influenced by your family members ?

Shankari Chandran : yeah, I think it's a lot of it was Just who I've grown up seeing to be honest. maybe my own vision, is myopic, right? Maybe my own vision is through those kinds of glasses. But also, I think in this novel, like I, as I as I get older, I think as a writer, I might have the confidence to explore more of the failures of our nature, right? . Muhammad Ahmed is an interesting who shows you the very ugly side of Lebanese life he gets as much criticism from his Lebanese community as he does from. He doesn't white community. Yeah. And he says, if we have to write the perfect story of the perfect Lebanese, we have to write it as honestly as possible and that's all of the bits. It's the ugliness, as well as the beauty. And I admire that very much about him.

(Continued on page 17)

CHAI TIME WITH SHANKARI - ANANDAN VASANTHA KRISHNAMOORTHY

“ I am always hopeful that human nature can be better. we can do better ”

(Continued)

I also felt very comfortable for what I was trying to do in these particular novels of staying within that space of goodness, rather than . We're still trying to tell a particular macro story about the civil war and injustice in the first novel. And then in the second novel about race and identity, and the appropriation of history, and the mythology of the country's foundation, and it's always like, I don't want to just distract the reader from that by giving my character too many failings.

Ethiroli : in your future novels ,you may have plans to write about the negative side of the characters.

Shankari Chandran : I think my next novel is, is set in a such set in a prison, and it's less about. It's lesser deconstruction of human nature and more and very instead of very plot driven novel, but for the one after that, I'm already so excited to think, what's next. The current project will be finished by the end of the year. It's I'm asking myself what's next? And that's why I would like to read Asokamitran’s stories . Particularly what, what does a novella look like? I would like to write in novella Like maybe 40,000 words.

Ethiroli : The next question is kinda controversial one. In the Songs of Sun God, one of the character boldly claims Prabaharan as Ravanan. Dhara character criticizes the tigers activities about the killings of the fellow liberals, using children as freedom fighters ,killing of Tamil-Muslims and using Tamils as protective shield during the last war. As a writer ,what are views about Prabaharan ? As you said earlier , the songs of sun god novel is all about 70 years of historical events happened in that island and the possibilities of the political events could have changed the history differently. Do you think non-violence movements could have made significant impact?

Shankari Chandran : Western audience doesn't have any emotional investment in Prabhakaran . Only Tamils has emotional investment on him . if you look from outside ,morality of the struggle is very complicated.. The intelligence here who are abroad and living safely of their armchairs are criticizing the morality of a struggle, right? Its easy to judge the morality of 14-year-old boys fought for their homeland. And indeed, judge the morality of the 50-year-old men sends the 14-year-old boys to fight. My objective is to present the different perspective of Prabakaran. Dhara character in the novel is mostly involved in the politics. She stays away from the moral judgement from tiger leadership. My own perspective of him is no longer matter. Even in the hindsight of 2020 vision even then it's imperfect. Because we don't know the turning points in Prabhakaran’s life. had he accepted the negotiations of 2002-2004 ? might they have accepted the peace deal things could have changed ?. we don't know.

We don't know because certainly this Sri Lankan government has never really demonstrated what I would believe to be a genuine desire for a peaceful federal structure or an empowered Tamil province. I'm not even going to say Tamil nation. Empowered Tamil province. Yeah. And , the quickness to genocide Tells you in a way what they're responses is to violence versus non-violence. So yeah. it doesn't matter anymore because they're all dead and we'll never know. The dead is still dead it we're now in a thought experiment is still what might have been and that is no comfort whatsoever to all of those parents that have lost so many of their children. Yeah.

Ethiroli: In your novel, you have talked about racial discrimination. But we do have caste discrimination in our Tamil community. In your novel "Songs of Sun God " the character Nala identifies another servant maid character Chenthan caste by his colour and appearance. Though we have migrated into Western countries, we do carry our caste system. As a writer, What are your views about casteism because you didn't talk much about this issue in your books?

Shankari Chandran : I Didn’t. Because I don't know enough about it. There are already so much there in my novels. As a next generation Tamils ,if my daughter brought home Tamil boyfriend from different caste ,I would not be able to detect that necessarily. My mother would be able to tell that.. If my mother had issues on that ,my response for that would be Shame on you. It's an oppressive system may have had its origins something useful 1000s of years ago. I don't know enough about it to know that.We have to be able to unify ourselves along the cultural lines and not stratify and divide ourselves along caste lines. it's still there in our diaspora. but eventually it will die out. As I look our extended family the ones who come as an adult to West ,the caste system is very much matter to them. But when I look at the next generation born in West .if their old relatives lives enough and still forceful enough to change, it will be an issue. They will die out eventually . the same way the old white extreme racists in Australia also will die out. The Tamil community who clings on to that system also die out. I really feel that the subsequent generation will move further away from the system. They will learn the different way from the West. The western have their own class system. They will learn the different way of being not the one born into. There is no superiority or inferiority around it. I think it will change. it's just generational. But I agree with you on the many of the upper cast diaspora still carry on the system.

Ethiroli : Do you think the freedom struggle also could have been impacted due to caste system? Shan

kari Chandran : yeah, absolutely. i think that social class and caste had impacts. I think the tigers largely from lower caste and class from the society. in some way the military struggle helped us to unify and eliminate and elevate them in some ways. Everyone is equal and everyone is fighting for their lives.

Ethiroli : Both of your novels talks about the Yazh library fire, the hundreds of thousands of books been destroyed. it's been more than 40 years, we as a global Tamil community couldn’t rebuild the yazh library in the in the migrated countries. why we fail to do?. We are building big temples in every country we moved in. should it be considered as our failure to pass our pride to next generation? I know we need temples. I feel that we need more libraries than temples.

Shankari Chandran : I also completely agree that we have such a strange in a way commitment to temple building. Yeah. And I understand faith in the importance of faith and the importance of even more certain So, understand the role of a temple in that and there's a place of community brings people together and you have your being, , you could have important many moments such as weddings there. there's something about Tamil nature as well. , you asked me before, why aren't we writing our books? And why are we encouraging our children to write these stories and There's a few things that happen within the Tamil psyche and I think part of it is an attachment to it to an old way of thinking around what our useful meaningful and prestigious and safe careers to start with.

Secondly, I think that we go into the world being intoxicated in a kind of stoicism, You must make a fast, You mustn't talk about it just move on now. we'll look at Jewish people How often, probably think these people are crying too much and thinking too much and feeling too much and talking to much. It's important in there. They've just got to move on. Now, There's a stoicism a misguided, almost stoicism that we must suffer in silence around other people. So I think we'll, if you're proud of your own story, then we should be telling that story more and I'm honoured and I'm proud to be one person who's doing it, but there are more people like me who can write in English and even better in Tamil.

Ethiroli : In the Chain time at cinnamon garden novel talks about the identity crisis and racism. There is a bold statement about “There are only two kinds of people lives in Australia , Australian and the others are migrants. Though we live in the country for years we always will be considered as migrants. This is the base of the novel. What are your thoughts of future? are we still Australians?

Shankari Chandran : Still a question, right? Because the whole chai time at cinnamon gardens is really challenging that it's trying to say to white people look. This is our experience that you don't think of us as Australian. And yet we think of ourselves, we, we want to think about ourselves as Australian, and if we don't, it's because you don't let us. It's not because don't think about social students because you do not allow it. And so wanted to explore in this novel, and I think that comes from a place of white supremacy and the, the fantasy, that Australia is a white country. And really, the lies we told when we came here to begin with, so but you're not asking me that question. You're asking me, is that hopes of the future? Yeah, and I, and I guess so, I will give you the I'll give you the right, the, the writer and the lawyers answer which is I am always hopeful that human nature can be better. we can do better. I’m always hopeful. if i wasn’t not hopeful, i wouldn’t have chosen to have 4 children . I genuinely believe in our ability and aspiration towards goodness and greatness. I do think in time the white Australians on assertion of Australian identity will expand to accept the multiplicities of identities.

Ethiroli: Do you have any plans to translate these novels into Tamil ?

Shankari Chandran :: yes , I do have plans .

Ethiroli : interview cant end without asking traditional question .who are your favourite authors and you had any one in particular in your mind that you wanted to write like them ?

Shankari Chandran : I got inspiration from two novels Big Little Lies by Liane Moriarty and Home Fire by Kamila Shamsie. Both novels take points of view of the characters and move the story forward through each point of view and allude to underlying tragedies or future tragedies that are happening in other people's lives and you don't know. I like that structure very much, it's very hard to execute and they both executed it brilliantly.. The reason I looked Liane Moriarty’s novel for inspiration is because it is a very readable novel, it's very accessible and it really delivers a powerful social message but through the vehicle of commercial fiction. And it was adapted into a very famous and successful TV show.

Ethiroli : Thanks for patiently answering all our questions. Thank you.

சந்திரயான்-3
மூடநம்பிக்கைகளுக்கு எதிரான அறிவியலின் வெற்றி

● அ.பாக்கியம்

இந்திய நாட்டின் விண்வெளி அறிவியல் வெற்றியின் சின்னமான சந்திரயான்-3 நிலவில் நிலைகொண்ட திகதியில் உத்தரப் பிரதேசத்தில் காவல்துறையினர் பஞ்சாங்கம் பார்க்க வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சந்திரயான் விண்கலம் நிலவில் இறங்கியதை இந்தியாவே கொண்டாடியது. எப்போதும் அதிகம் ஆட்டம் போடுகின்ற, மூடநம்பிக்கையின் முடைநாற்றம் வீசுகின்ற சனாதனிகள் இதை அடக்கித்தான் வாசிக்கிறார்கள். இந்தியாவில் மோடி தலைமையிலான பா.ஜ.க.வின் ஒன்றியஅரசு அமைந்த காலத்திலிருந்து இன்றுவரை மக்களிடம் மூடநம்பிக்கைகளை தக்க வைப்பதற்கும், வளர்ப்பதற்குமான முயற்சிகளில்தான் பா.ஜ.க.வும் ஒன்றிய அரசும் அதிகமாக ஈடுபட்டு வருகின்றன.

மும்பையில் ஒரு மருத்துவமனைத் திறப்பு விழாவில் பேசிய பிரதமர் மோடி, பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை முறை, சோதனைக் குழாய் குழந்தை பிறக்கிற முறை, குளோனிங் முறை புராணகாலத்திலே இருந்தது என்று புருடா விட்டார். இதன் தொடர்ச்சியாக பா.ஜ.க.வின் தலைவர்கள் குருஷேத்திரப் போரில் இன்டர்நெட் இருந்தது என்றும், விமானங்கள் பறந்தன என்றும், கட்டுக்கதைகளை மூடை மூடையாக அவிழ்த்து விட்டார்கள். மக்கள் நோயால் பாதிக்கப்பட்ட பொழுது மாட்டு மூத்திரத்தை குடிக்க சொல்லியும், மாட்டுச்சாணத்தை பூசிக்கொள்ளவும் மடமடவென்று ஆலோசனைகளை வணங்கினார்கள். மத்திய பிரதேசத்தில் ஒரு மருத்துவமனையில் ஜோசியம் பார்த்து விட்டு தான் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்ற அறிவுரை வழங்கினார்கள். இந்தியா முழுவதும் மூடநம்பிக்கைகளை முழுதாகக் குத்தகைக்கு எடுத்து பரப்பிக் கொண்டிருப்பவர்கள் மத்தியில் சந்திரயான்-3 வெற்றி உள்ளூர அச்சத்தை ஏற்படுத்தி இருக்கும். மறுபுறத்தில் இந்த வெற்றி பிரதமர் நரேந்திர மோடியை மட்டும் சாரும் என்று மக்கள் பணத்தில் விளம்பரங்களை அள்ளி வீசி விஞ்ஞானிகளையும் சந்திரயானையும் பின்னுக்கு தள்ளி மோடியை முன் நிறுத்துவார்கள். தாங்கள் வந்த பிற்பாடு தான் இஸ்ரோவே உருவானது போல் வலைத்தளப் பொய்களை பொங்க விடுவார்கள்.

இந்தியாவின் மிகச் சிறந்த விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக இரவு பகலாக உழைத்து ரஷ்யா அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளுக்குப் பிறகு நான்காவதாக நிலவிற்கு விண்கலம் அனுப்பும் ஆராய்ச்சியில் வெற்றி பெற்றிருக்கக் கூடிய ஒரு நாடாக இந்தியா உயர்ந்திருக்கிறது. இந்திய விஞ்ஞானிகள் விண்வெளி ஆராய்ச்சியில் ஒரு மாபெரும் சரித்திர சாதனையை நிகழ்த்தி இருக்கிறார்கள். இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேருவின் தொடர் முயற்சி நாட்டில் விண்வெளி தொழில்நுட்பம் வளர்வதற்கும் முன்னேறுவதற்கும் முக்கியமான காரணமாக இருந்தது.

1920 ஆம் ஆண்டுகளில் கொல்கத்தாவில் சீசிர் குமார் மித்ரா என்ற விஞ்ஞானி கதிர் இயக்க செயல்பாடுகள் மூலம் விண்வெளி ஆய்வுகளில் நாட்டம் கொண்டார். சேர் சி.. வி ராமன் அவர்களும் அறிவியல் மேதை மேக்னா போன்றவர்களும் விண்வெளி ஆய்வில் தங்களது பங்கை செலுத்தினார்கள். 1945 ஆம் ஆண்டு தான் ஒருங்கிணைந்த விண்வெளி ஆய்வுகளுக்கான முயற்சிகள் உருவாக்கப்பட்டன. இதே காலத்தில் அகமதாபாத்தில் விக்ரம் சாராபாய்,

மும்பையில் ஹோமி ஜஹாங்கீர் பாபா ஆகியவர்களின் முயற்சியால் விண்வெளி ஆய்வுக்கான அடித்தளம் போடப்பட்டது. 1950 ஆம் ஆண்டு ஹோமி பாபா அவர்களால் அணு ஆற்றல் துறை உருவாக்கப்பட்டமை இந்த வளர்ச்சியை மேலும் துரிப்படுத்தியது. 1957ஆம் ஆண்டு ஹைதராபாத்தில் ஒஸ்மானியா பல்கலைக்கழகத்தில் வானாய்வு மையம் அமைக்கப்பட்டது. அமெரிக்க தொழில்நுட்ப ஆதரவுடன் இந்த வானாய்வு மையம் உருவாக்கப்பட்டது.

1957ஆம் ஆண்டு சோவியத் யூனியன் முதன்முதலாக ஸ்புட்னிக் விண்கலத்தை செலுத்தி விண்வெளி ராஜ்யத்தை துவங்கி வைத்தது. இதன்பிறகு பல நாடுகளிலும் விண்வெளி ஆய்வை நடத்துவதற்காக ஆர்வமும் உந்து சக்தியும் ஏற்பட்டது. 1962 ஆம் ஆண்டு விக்ரம் சாராபாய் தலைமையில் இந்திய தேசிய விண்வெளி ஆராய்ச்சி குழு (INCOSPAN) அமைக்கப்பட்டது. இந்த காலம் முழுவதும் நடைபெற்ற விண்வெளி ஆய்வு மைய கட்டமைப்பும் வளர்ச்சியும் ஜவஹர்லால் நேரு அவர்களுடைய அறிவியல் பார்வையின் மூலமாக முன்னெடுக்கப்பட்டது. இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்காக விண்வெளி ஆய்வு மிக அவசியமானது என்பதை அவர் வலியுறுத்தி அதற்கான பணிகளில் ஈடுபட்டார். இதன் தொடர்ச்சியாகத்தான் 1969 ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான இஸ்ரோ உருவானது.

உலகில் புவி சார்ந்த அரசியல் அதன் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்றவற்றில் ஒவ்வொரு நாடும் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டிய சூழல் உருவாகியது. இந்தியாவிற்கும் இந்த நிலைமை உருவான பொழுது 1960 முதல் 1970 ஆம் ஆண்டுகளில் விண்வெளி ஆய்வில் இந்தியா தனது சொந்த தொழில்நுட்பங்களை வளர்த்துக் கொள்வதற்கான தீவிர முயற்சிகளை எடுத்து அதில் வெற்றி பெறவும் ஆரம்பித்தது. இதே காலத்தில் இந்தியா செயற்கைக்கோள்களை விண்வெளிக்கு அனுப்புவதில் அமெரிக்கா பல இடையூறுகளை செய்ய ஆரம்பித்தது. இந்தப் பின்னணியில் 1975 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் விண்கலமான ஆரியப்பட்டா சோவியத் சோசலிச ஐக்கிய குடியரசின் ஆதரவுடன் விண்ணில் ஏவப்பட்டது. விண்கலங்களை விண்ணில் ஏவுவதற்கு அமெரிக்கா பல நாடுகளை அனுமதிக்கவில்லை. அமெரிக்காவின் ஏவு தளங்களில் இருந்து அனுப்புவதற்கு அதிகபட்சமான கட்டணங்களை வசூல் செய்தது. இந்தப் பின்னணியில்தான் சோவியத் யூனியன் உதவியுடன் இந்தியா ஆரியபட்டாவை அனுப்பியது. மக்கள் சீன குடியரசு விண்வெளி துறையில் வளர்ச்சி பெற்ற பிறகு மிகக் குறைந்த கட்டணத்தில் வளரும் நாடுகளின் விண்கலங்களை அனுப்பியது.

விண்ணுலகம் தன்னுலகம் என்று அமெரிக்கா ஆதிக்கம் செய்ய எடுத்த முயற்சிகள் தகர்ந்து வருவதற்கான சான்றுகளில் ஒன்று தான் இந்திய விஞ்ஞானிகளின் சந்திரயான்-3 வெற்றி.

1980 ஆம் ஆண்டு இஸ்ரோ தனது சொந்த முயற்சியால் ஏவு தளங்களையும் ஏவுகணைகளையும் உருவாக்கி எஸ் எல் வி 3 ஏவுகணைகள் மூலமாக முதல் செயற்கை கோளான ரோகினி செயற்கைகோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது. 1979 முதல் 1983வரை நான்கு விண்கலங்களை அனுப்பி இரண்டில் வெற்றியும் பெற்றது.

2008 ஆம் ஆண்டு பி எஸ் எல் வி என்ற புதிய முறைகள் மூலமாக ஒரே முறையில் 10 துணை விண்கலங்களை அனுப்பி இந்தியா ரஷ்யாவின் சாதனையை முறியடித்தது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தனது முதல் முயற்சியாக, 2008- ஆம் ஆண்டு ஒக்டோபர் 22-ம் திகதி பி.எஸ்.எல்.வி-சி11 ரொக்கெட் மூலம் ரூ.365 கோடியில் உருவாக்கப்பட்ட சந்திரயான்-1 என்ற விண்கலத்தை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. இந்த விண்கலம் 2009- ஆம் ஆண்டு நவம்பர் 14-ம் திகதி 100 கி.மீ. தொலைவிலான நிலவின் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. 11 அறிவியல் கருவிகளைத் தாங்கி சென்ற சந்திரயான்-1, நிலவில் தண்ணீர் இருப்பதை உறுதி செய்தது.

தொடர்ந்து இஸ்ரோவின் விண்வெளி ஆய்வுகள் முன்னேறிக்கொண்டே இருந்தன. ரூ.604 கோடி செலவில் உருவான சந்திரயான்-2 விண்கலம், எல்.வி.எம். ரொக்கெட் மூலம் 2019- ஆம் ஆண்டு ஜூலை 22-ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது. செப்ரெம்பர் 6-ஆம் திகதி நிலவின் மீது அதை இறக்கும் முயற்சியின்போது, தோல்வியடைந்தது.

சந்திரயான்-2 தோல்வியில் கிடைத்த பாடங்களின் விளைவாக, தொழில் நுட்பரீதியாக மேம்படுத்தப்பட்ட, தானியங்கும் திறன் கொண்ட லேண்டர், ரோவருடன் ரூ. 615 கோடி செலவில் உருவாக்கப்பட்ட சந்திரயான்-3 விண்கலம், கடந்த ஜூலை 14-ஆம் திகதி எல்.வி.எம். மாக்-3 ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

சந்திரயான்-3 விண்கலம், 18 நாட்கள் நிலவைச் சுற்றி வந்தது. கடந்த 7- ஆம் திகதி லேண்டர் சாதனம் விடுவிக்கப்பட்டது. லேண்டர் சாதனத்தின் மென் தரையிறக்கம், ஓகஸ்ட் 23 ஆம் திகதி (23-8-23) புதன்கிழமை மாலை 6.03 மணிக்கு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

இந்த விண்கலம் மூலமாகவும் நிலவில் தரை இறங்கியுள்ள ரோவர் கருவி மூலமாகவும் நிலவில் மெக்னீசியம், அலுமினியம், இரும்பு, சிலிகான், பொட்டாசியம், கால்சியம், டைட்டானியம், லித்தியம், ஹைட்ரஜன் போன்ற கனிமங்கள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதை ஆய்வு செய்து பூமிக்கு தகவல் தெரிவிக்கப்படும். நிலவில் ஆய்வை துவங்கி ரோவர் வெற்றிகரமாக செயற்படத் தொடங்கி விட்டது.

இந்த விண்கலம் வெற்றி பெற்றதன் மூலமாக விண்வெளி பொருளாதாரத்தில் இந்தியாவும் தனது முக்கியமான பங்கைப் பெற ஆரம்பிக்கும்.

உலக விண்வெளி பொருளாதாரம் 550 பில்லியன் டொலரை எட்டியுள்ளது. மேலும் இந்தியாவின் விண்வெளிப் பொருளாதாரம் தற்போது 10 முதல் 11 பில்லியன் டொலராக உள்ளது. (21ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.எஸ். ஜோதிட நிலையம்

பண்டித்: தேஜா ஜி

PANDIT: TEJA JI

உலகப் பிரசித்தி பெற்ற இந்தியாவின் பரம்பரை கைரேகை ஜோதிடரைச் சந்தியுங்கள்.

100% சரியான கணிப்பு

- திருமண பாக்கியம்
- குழந்தைகள் பிரச்சினை
- கல்வி விஷயங்கள்
- வேலைப் பிரச்சினைகள்
- வணிக சிக்கல்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- அதிர்ஷ்ட எண்கள்
- லக்ஷ்மி பூஜா
- வஸ்து பூஜா
- அதிர்ஷ்ட கல்

என் தொழிலை எவராலும் உடைக்கவும் முடியாது. எனக்கு முன் எவராலும் வேலை செய்யவும் முடியாது. இது எனது சவால்.

எந்தவொரு சிக்கலையும் சரிசெய்யவும், உடைக்க முடியாத பாதுகாப்பை வழங்கவும் அவர் சக்திவாய்ந்த இந்திய பிரார்த்தனைகளை செய்கிறார்.

உலகப் பிரசித்தி பெற்ற இந்திய ஜோதிடர் பண்டித் தேஜா ஜீயைச் சந்தியுங்கள்.
உங்கள் தனிப்பட்டதோ, பொதுவானதோ அனைத்து வகையான பிரச்சினைகளையும் சில நாட்களிலேயே தீர்த்து வைப்பார்.

தீர்க்க முடியாத பிரச்சினைகளைத் தீர்த்து 100 வீதம் நம்பிக்கையை அவர் கொடுப்பார்.

சிறப்பான எதிர்காலத்துக்காக இன்றே வாருங்கள்

முற்பதிவுகளுக்கு அழையுங்கள்

0405075655

2a, chandler road, noble Park, 3174.

ஒப்பந்தச் சட்டம்
Law of contract

சட்டத்தரணி - த.நா.ஜெயராசசிங்கம்

இவர் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர். பின்னர் பிரிட்டனில் சட்டம் பயின்று சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றவர். பின் ஆஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா விக்ரோறியா மாநிலத்தில் வழக்கறிஞராகத் தகுதிபெற்றவர். தற்போது சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்.

"சென்ற மாத இதழில்" ஒரு முன் மொழிவு ஆனது பொதுமக்கள் அனைவருக்கு மாக (public at large) விடப்பட முடியும் என carlill வழக்கில் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்பினைப் பார்த்தோம்.

இப்பொழுது மாற்று முன்மொழிவு என்றால் என்ன எனப் பார்ப்போம்.

மாற்று முன்மொழிவு என்பது ஆங்கிலத் தில் (counter offer) என அழைக்கப்படும்.

உதாரணமாக "A" என்பவர் தனது மோட்டார் வாகனத்தினை 25000 க்கு விற்க முன்மொழிவு செய்கின்றார். "B"என்பவருக்கு "B" தான் அம்மோட்டார் வாகனத்தினை 20 000 க்கு மட்டுமே வாங்குவர் எனக் குறிப்பிடுகின்றார்.

இது" B" யினால் " A"க்கு விடப்படும் ஒரு counter offer ஆகும். எனவே "A" னுல் முன்னால் செய்யப்பட்ட முன்மொழிவு வலிவிழந்து போகும்.

முன்னைய இதழ்களில் ஒப்பந்தம் ஒன்றில் தேவைப்பாடுகள் ஆறு எனப் பார்த் தோம். அவற்றில் முதலாவதாக "சட்ட முறையான உறவை ஏற்படுத்தும் எண்ணம்" என்பதனைப் பார்த்தோம். அடுத்து முன் மொழிவு என்றால் என்ன என பார்த்தோம். அடுத்து மாற்று முன்மொழிவு என்றால் என்ன எனப் பார்த்தோம்.

தற்பொழுது ஒப்பந்தம் ஒன்றின் மூன்றா வதாக அம்சம் "ஏற்பு" Acceptance" என்பதனைப் பற்றி விரிவாக ஆராய்வோம்.

"ஏற்பு" என்பது வாய்மொழி மூலமோ எழுத்து மூலமோ அன்றி நடத்தை மூலமோ ஒரு முன்மொழிவுகளை (offer) ஏற்பதாகும்.

ஒரு முன்மொழிவு ஆனது ஏற்புச் செய்யப்பட்டதாக வாய்மொழி மூலமோ எழுத்து மூலமோ அன்றி நடத்தை மூலமோ அறிவிக்கப்பட்டதும் ஏற்கப்பட்டதாக கொள்ளப்படும்

ஏற்பு ஆனாது முன்மொழிவின் அதே விதிமுறைகளைப் (terms) பின்பற்றி இருக்க வேண்டும். ஏதாவது விடயத்தில் மாறுபாடு இருந்தால் அது மாற்று முன்மொழிவு ஆக (counter offer) கருதப்படும். ஏற்பா கருதப்பட மாட்டாது.ஏற்பவர் ஏதாவது ஒரு முறையில் ஏற்புக் செய்தால் அங்கு ஒரு ஒப்பந்தம் உருவாக்கப்பட முடியும்.

உதாரணமாக நாம் முன்பு பார்த்த carlill வழக்கில் குறிப்பிடப்பட்ட விதத்தில் smoke ballயை பயன்படுத்தியமை ஏற்பாக கருதப்பட்டு அங்கு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது என நீதிமன்று தீர்ப்பளித்தது.

ஒரு "ஏற்பு" ஆனது தபால் மூலமோ அறிவிக்கப்பட்டால் "ஏற்பவர்" ஏற்புக் கடிதத்தினை தபால் பெட்டியினுள் போட்ட தும் "ஏற்பு" நடை பெற்றதாக கருதப் படும்.

ஒரு முன்மொழிவினை செய்பவர்(offeror) எப்படி ஏற்பு (Acceptance) செய்யப்பட வேண்டும் என்பதை குறிப்பிட்டு சொல்ல முடியும். உதாரணமாக எழுத்து மூலமே ஏற்பு செய்யப்பட்ட வேண்டும் என்று offeror குறிப்பிட்டால் அவ்வாறே ஏற்பு செய்யப்படல் வேண்டும். சில விதிவிலக்கு கள் உண்டெனினும் பொதுவாக குறிப் பிட்டால் ஏற்பு ஆனது (offeror) முன் மொழிவு செய்தவருக்கு தெரியப்படுத்தப் படல் வேண்டும்.

ஆனல் carlill வழக்கில் smokr ball யை குறிப்பிட்ட விதத்தில் பயன்படுத்தியமை போதியனவான (sufficient) "ஏற்பு" எனக் கொள்ளப்பட்டது.

ஒரு ஒப்பந்தத்தின் தேவைப்பாடுகள் ஆன சட்ட முறையான உறவை ஏற்படுத்தும் எண்ணம் "முன்மொழிவு" மாற்று முன் மொழிவு", "ஏற்பு" என்பன பற்றி பார்த் தோம்.

இப்பொழுது (consideration) வெகு மதி பற்றிப் பார்ப்போம். (considcration) வெகுமதி எனப்படுவது என்ன? வெகுமதி என்பது ஒரு கட்சிக் கட்சிகளிடமிருந்து இன் னொரு கட்சிக்காரருக்கு (party) பெறுமதி யான ஒன்று பரிமாற்றம் செய்யப்படுவது ஆகும்.

ஒரு ஒப்பந்தம் வலுவாக்கப்படுவதற்காக ஒவ்வொரு கட்சிகளுக்கும் ஏதாவது ஒன்றை கொடுப்பர்.

உதாரணமாக "A" ஒரு காரை "B" க்கு 25000 க்கு விற்க ஒப்பந்தம் செய்தால் "A" தனது காரை கொடுத்து 25000 பெறு கின்றார். "B" 25000 க்கு கொடுத்து ஒரு காரை பெறுகிறார். இதனால் "A" க்கு "B" க்கு இடையே செய்யப்பட்ட ஒப்பந்தம் வலு வாக்கப்படுகின்றது

ஒரு வெகுமதி ஆனது (promise) வாக்கு றுதி ஒன்றாக அமையலாம் உதாரணமாக A தனது காரை B க்கு விற்க ஒப்பந்தம் செய்தால் அது வலிதான ஒப்பந்தம் ஆகும். ஒரு வெகுமதி (consideration) கடந்த காலத்தில் நிகழ்ந்தாக அமைய முடியாது.

உதரணமாக "A" தனது புத்தகம் ஒன்றை Bக்கு எதிர்காலத்தில் விற்க உடன் பட்டால் அது ஒரு வெகுமதி கொள்ளப்பட முடியாது. எனவே அவ் ஒப்பந்தம் வலு வாக்கப்பட முடியாத ஒப்பந்தம் ஆகும்.

அடுத்து ஒரு ஒப்பந்தத்தில் முக்கியமான அம்சம் என்ன?

என்னவெனில் ஒப்பந்த வாசகங்கள் நிச்சயமானதாக அமைதல் வேண்டும். (certainty of terms)

ஒப்பந்தம் ஒன்று அமைய அந்த ஒப்பந்தத்தில் வாசகங்கள் தெளிவாக தெரியப்படுத்தப்படல் வேண்டும் (clear and precise) பொதுவான மொழியில் ஒப்பந்தம் அமையாது. குறிப்பிட்ட தெளி வான மொழியில் அல்லது நடத்தையில் ஒப்பந்தம் அமைதல் வேண்டும்.

(தொடரும்)

REACH YOU ALL TIME
True Handcrafts
truehandcrafts.com
FRIENDLY
DISABLED ACCESS
FREE ENTRY
AYUSH
HEALTHY FOOD MELA
FRESH AUSTRALIAN GROUND MASALA
AYURVEDIC, SIDDHA MEDICINES
- BORED OF HEALTHY FOOD?
- WANTED TO KNOW / TASTE VARIETIES
  BEST OPPORTUNITY TO INTRODUCE HEALTHY FOOD ITEMS TO YOUR CHILDREN
- WE WANT TO SEE YOUR CHILDREN STAYING HEALTHY
- EAT HEALTHY FOOD AND HELP YOURSELF AND YOUR CHILDREN FREE FROM CHRONIC ILLNESS
- DO YOU WANT CHILDREN STAY HEALTHY AND LONG LIFE
- WOULD YOU LIKE TO TEACH YOUR CHILDREN EATING HEALTHY
- MILLET FOOD, RED AND BLACK RICE
- BOILED GOODNESS, LOW-OIL DELIGHTS
- SWEETENED WITH COUNTRY SUGAR
- ORGANIC & HERBAL PLANT SALE
- FRESH TURMERIC & BADAM MILK
- NO PLAIN FLOUR SNACKS
- FOR ALL AGES
- JOIN THE WHOLESOME CELEBRATION!

NOURISH YOUR BODY & SOUL!
Venue : Grevillea Room Wentworthville Community centre,
2, Lane street, Wentworthville - NSW 2145
Time : 3:00 pm -8:00 pm Contact : +61 406 267 769
Date : 17th Sep 2023, Sunday
truehandcrafts@yahoo.com
@truehandcrafts

இருமனம் சேரும்
திருமணம்
+61 426 954 355
Tamil Brahmins Sister seeks a suitable partner for her fair and young looking 53 years old sister.She is in Melbourne and working full time. Looking for a partner in Melbourne or who is willing to move to Melbourne.she is divorced. Reply with a recent photograph.
Caste not required
Email:
proposalsmel21@gmail.com

CEYLON EXPRESS
MONEY TRANSFER
- Best Rates Guarantee
- Same Day Bank Transfer
- Responsible Customer Support
- Easy, Quick Internet Money Transfer

127, Walker st, Dandenong | CONTACT : OSMAN 0402 396 052

புயலுக்குப்பின்...

ஊழிக்காலம்-2
48

அம்மா, நாலு மணிக்கு புள்ளைகளை விடவேணும். அந்ந நேரம் ஓம் சாந்திக்காறங்க வர்றாங்க, இந்த வகுப்பு டெய்லி வேணுமா..? வாரம் ஒருதரம் போதும், அவங்க கிட்ட சொல்லுங்கம்மா" என்றார்.

"அட கஸ்ட காலமே..எங்களுக்கும் பெரிய கரைச்சல்தான், சொல்லிவிடுறன்." பார்வதிக்கு அவளுடைய கஸ்ரம் புரிந்தது. அன்றைய தியான வகுப்பு முடிந்து கலந்துரையாடல் நடந்தபோது நாசுக்காக இதைச் சொல்லி விட்டாள்.

"தினமும் இந்த நேரம் எமக்குப் பொருத்த மாயில்லை, அதிகாலையில் தினமும் செய்கிறோம். இது சந்தடி நேரம்"

"ஓ.. அப்ப நாங்கள் எப்பவரலாம்?"

" ம். ஒவ்வொரு செவ்வாயன்றும் வந்தால் போதும்."

எல்லோரும் அதையே சொன்னார்கள். காரணம் அன்று செவ்வாய்க்கிழமை. இனி ஒரு வாரம் ஓய்வு, என்ற நினைப்பில்தான். பார்வதிக்கு அன்றிரவு முழுவதும் உறங்க முடியவில்லை. இங்கே மூன்று வேளையும் அரிசிச்சோறு, காலை உணவு மட்டும் சில நாட்களில் கடலை, பயறு என்றிருக்கும், அநேகமாக பச்சையரிசி, ம்க்கும். அதன் நிறம் சிவப்புத்தான், அவிக்காத நெல்லரிசி. அவித்த நெல்லின் உமிமட்டும் நீக்கி தவிட்டுக் கோது சற்றும் நீங்காத அரிசி. வெந்தபின் அரிசி வெடித்து பிரிந்து சவண்டு நீண்டிருக்கும் .குரக்கன் பிட்டின் சொறசொறப்பு அப்படியே இருக்கும். மாசிபோட்ட கட்டைச் சம்பல், சம்பல் தமிழில் துவையல், அரையல் எனப்படும். உரலில் இடித்தால் துவையல், அம்மியில் அரைத்தால் அரையல். போர்த்துக்கீசர் காலத்தில் ஒரு வெள்ளையர் கடையில் தோசை சாப்பிட்டாராம், தேங்காயில் செய்த துவையலைச் சாப்பிட்டவர். அது இன்னம் கொஞ்சம் வேண்டும் என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான 'சம்' என்பதையும் , தேங்காயை சிங்களத்தில் குறிக்கும் "பொல்" என்பதையும் இணைத்து பணியாளரிடம் "சம் பொல்" கேட்கப்போய் சம்பல் உலக வழக்காகி விட்டது.

இந்தத் தோசையும் வடநாட்டு மனிதரால் தான் பெயர் பெற்றதாம். இந்தியில் "தோ" என்றால் இரண்டு முதல் தடவை சட்டியில் ஊற்றும் போது "சைக்" என்று சத்தம் போட்டது. திருப்பி இரண்டாவது தடவையும் போட மறுபடியும் "சைக்" என்றது. எனவே அது தோ(வடமொழியில் தோ என்றால் இரண்டு) சைய் ஆனதாம்,

பார்வதிக்கு இந்த ஆராய்ச்சிகள் பிடித்திருந்தன. மனித நடத்தைகள் பற்றி என்ன வெல்லாமோ ஆய்வு செய்திருக்கிறார்கள். பெண்களின் அதிலும் இளம் பெண்களின் நடத்தை பற்றிய பார்வதியின் ஆய்வுக்குள் தன்னைப் பற்றியும் அவள் ஆய்வு செய்ய முயன்றபோது அது தனிப்பட நோக்க வேண்டிய பரிமாணங்களை ஏற்படுத்திக் கொண்டு விரிவடைந்தது.

பைத்தியக்காரி போல தன் நடத்தைகள் மாறி வருவதை அவளால் கிரகிக்க முடியவில்லை, வெறி பிடித்தவள் போல எழுதினாள். நேரமிருந்த போதெல்லாம் எழுதினாள். மாடிக்கு ஏறும் படிக்கட்டுகளில் ஏறி இடைவழியில் நின்று தெற்கு நோக்கிப் பார்த்தாள்.

பரந்து விரிந்திருந்த வவுனியாக்குளத்தின் நீர் கண்ணாடித் தட்டுப்போல மின்னியது. அதன் தென்கரையில் பிள்ளையார் கோவிலின் மணிக்கூட்டுக் கோபுரமும், முற்றமும் துலங்கின. சற்றே தலை திருப்பினாள். பசார்வீதி, முகப்பில் பள்ளிவாசலுடனும் உயர்ந்த கட்டடங்களுடனும் நீட்டி நிமிர்ந்து கிடந்தது. அந்தோனியார் ஆலயம் புதிய இரட்டை கோபுரத்துடன் தெரிந்தது. சின்னஞ்சிறு வயதிலிருந்தே அவள் கால்களால் அளந்து திரிந்த இடங்கள். கண்ணெதிரே மின்னின. அந்த இடங்களை அவள் அடைவாளா, சுதந்திரமாக கைவீசி நடப்பாளா..?ஒரு நாள் மின்சாரம் பொருத்த வந்தவன் அவளிடம் " இந்த வயசில,இங்கே இருக்கிறமே எண்டு, உங்களுக்கு ஒரு மாதிரியா இல்லையா?" என்றான்.

" என்ன ஒரு மாதிரியா?" என்றாள் பார்வதி.

"இல்ல. கூச்சமா..."

"நாட்டில இவள பெரிய போராட்டம் நடந்துதே.. அதில களைச்சு விழுந்தவனுக்கு தண்ணியாவது குடுத்திருக்கிறீங்களா..?"

"ச்சா, நீங்க என்ன சொல்லவாறீங்கக்கா?"

"இல்ல இதில ஒரு சின்னப் பங்குகூட செய்யேல்லயே எண்டு உங்களுக்கு கூச்சமா... வெக்கமா... இல்லையா..?"

" ...."

"பின்ன, என்னக் கேக்கிறாய்? முட்டாள் உரிமைக்காக போராடி சிறைக்கு போறது பெருமைதான். நான் பெருமையோடு தான் இருக்கிறன்."

திறந்த வானத்தையும் பரந்து வெளியையும், கோவில்களையும் கடைத் தெருவையும், காணக்காண அவளது உறுதி விடைபெற்றுப் போய்விடுகிறது. அழவும் முடியாமல் அடக்கிவைத்து... மனம் கனத்துவிட்டது, இரவில் யாருமறியாமல் அழுதாள். பகலில் யாருடனும் பேசாமல் அடைந்து கிடந்தாள். யாரையும் பார்க்கப் பிடிக்கவில்லை, "இது நல்லதல்ல இது நல்லதல்ல... அமைதியாக இரு.. எல்லோரும் உன்னைப்போலதானே. அவர்களில்லையா..? " மனம் சமாதானம் செய்துகொண்டேயிருந்தது.

தியானத்தின் நேரத்தை அதிகரிக்கவும் முடியவில்லை. எப்போதும் யாராவது எதற்காவது அழைத்தார்கள்.

அன்பும் அமைதியும் இங்கே கிடைக்காது. இந்த வாரம் கலாவுடன் சுமதியும் பிள்ளைகளும் வந்தனர்.

"என்னை முதல் முதல் வந்து பார்த்துவிட்டு போனபின் கொள்ளையர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட மருமகனின் மனைவியும் பிள்ளைகளும் இவர்கள்தான்." பார்வதி கவிதாவிடம் அறிமுகம் செய்தாள், யார் யாரையெல்லாம் உழைத்துக் காப்பாற்றினாளோ அவர்கள் கைவிட்டுப் போய் விட்டனர். அவளுடைய பாவத்தின் சம்பளம் அவளுக்கு வாய்த்திருக்கிறது.

"16 ஆம் திகதி வைகாசி மாதம். இன்றுடன் என் பேத்தியைப் பிரிந்து ஒரு வருடம், அவள் கடைசியாக வட்டுவாகலில் என் பங்கருக்கு வந்து எங்களிட்ட விடைபெற்றுப் போனாள்." என்று பார்வதி கூற,

"என்ர கவிதாஸ் 'நான் எங்க இருந்தாலும் உன்னைத் தேடி வருவன்' எண்டிட்டு போனவர், கலியாணம் முடிச்சு ஒரு மாதம். எவ்வளவு சந்தோசமாய் இருந்தம்...கடைசியில..." கவிதா... விசும்பினாள். அப்போது தான் அந்த அறைக்குள் வந்த ரூபினி " எனக்கு கலியாணம் நடந்து ஒரு கிழமை. அவரைப் பிடிச்சிட்டினம் அந்தக் கோவத்தில நானும் ஓடி வந்திட்டன்" என்றாள்.

இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சோக நினைவு இருந்தது. யாரும் யாருக்கும் மனப்பூர்வமான ஆறுதலைச் சொல்ல முடியவில்லை.ஒருவர் பின் ஒருவராக தத்தம் கதையைச் சொல்ல ஆரம்பித்தனர். அடிக்கடி ஏதாவது நோய் வந்து கொண்டேயிருந்தது. தொய்வு, பிரசர், பல்வலி, என்று எதுவோ ஒன்று. வைத்தியசாலை அருகிலேயே இருந்ததால் போகவும் வரவுமாக அநேக பிள்ளைகள் அதை ஒரு உல்லாசப் பயணமாக்கினர்.

திடீரென ஒரு நாள் பார்வதி எதிர்பாராத விதமாக துளசியைச் சந்தித்தாள். மனம் குதூகலித்தது. பார்வதியைக் கண்டதுமே...

" மாயாவைக் கண்டீர்களா..?" என்றுதான் கேட்டான்.

" எங்கப்பா..? நானும் தேடுதல் போடக் குடுக்காத இடமேயில்லை."

"அவள் இருப்பாள்" என்று நம்பிக்கை ஊட்டினான்.

"நான் எவ்வளவோ இடங்களுக்கு கடிதம் போட்டு போட்டு சலித்து விட்டேன்" என்றான்.

"நாங்கள் முயன்றது குறைவோ." என பார்வதி நினைத்தாள். வந்தவர்களில் சிலருக்கு மாலைநேர கிளினிக். அதனால் எல்லோரும் வரும் வரை ஆண் போராளிகளுடன் பேசிக் கொண்டிருக்க முடிந்தது. இருதரப்பு பேரூந்துகளும் அருகருகாகவே நின்றன.

இதற்குள் அழைத்து வந்த சார்ஜண்டை தமது பேச்சினால் ஒரு வழிப்படுத்தி அவனையும் அழைத்துக் கொண்டு முன்புறமிருந்த கடைகளை அலசப் போனார்கள்.

சில பெண்கள் வரும் போது எல்லோருக்கும் நிலக்கடலை வாங்கி வந்தார்கள். சில போராளிப் பையன்கள் வந்து அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஒரே துறையில் வேலை செய்தவர்கள் போலும், மேலும் பல நண்பர்களைப் பற்றியும் விசாரித்து அறிந்தனர். சுமார் நாலு மணியளவில் ஆண்கள் தொகை நிரம்பிவிட்டது. அவர்கள் புறப்பட்டனர்.

பெண்கள் சென்ற வாகனத்தில் இருந்த இருவரையும் கேலி செய்தார்கள். " என்னப்பா...தாலிகட்ட ரெடியா...?"

" இதுகளையா..? நாங்க நல்லாயிருக்கிறது பிடிக்கேல்லயா..?" என்றவாறே இறங்கி தமது வாகனத்தில் ஏறும்போதே,

"அக்கா சொறியக்கா, சும்மா கோவிக்காதீங்கோ.." என்றார்கள். பெண்களுக்குள் கலகலப்பான மகிழ்ச்சி குடி கொண்டது. தாம் பேசிக்கொண்டவற்றை மறுபடி மறுபடி கூறி மகிழ்ந்தனர்.

சந்திரயான்-3...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரயான் 3 வெற்றியின் மூலம், மேலும் வளம் பெறும்.

2023-ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் உலகளாவிய விண்வெளிப் பொருளாதாரம் ஏற்கனவே 546 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டியுள்ளது என்று விண்வெளி அறக்கட்டளை தனது ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் விண்வெளிப் பொருளாதாரம் 91மூ வளர்ச்சி கண்டுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை, இந்தியாவின் விண்வெளிப் பொருளாதாரம் 2025-க்குள் 13 பில்லியன் அமெரிக்க டொலரை எட்டும். 2020ல் இது 9 பில்லியன் டொலராக இருந்தது. அதாவது விண்வெளிப் பொருளாதாரத்தில் இந்தியாவின் உலகளாவிய பங்கு தற்போது மிகவும் குறைவாக உள்ளது.

1957ஆம் ஆண்டு சோவியத் யூனியன் நிலவிலும் வெற்றிக் கொடி நாட்டிய பிறகு அமெரிக்காவிற்கு அச்சம் ஏற்பட்டது. எனவே 1960 ஆம் ஆண்டு விண்வெளி ஒப்பந்தம் (outer space treaty) போடப்பட்டது. பிறகு 1967,1968 ,1972 ,1975 ,1979 ஆகிய ஆண்டுகளில் பல துணை ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. 1960 ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தத்தின் முக்கியமான சாராம்சம் விண்வெளி என்பது மனித குலத்தின் பொதுச்சொத்து என்று ஒப்பந்தத்தில் இருக்க வேண்டும் என சோவியத் யூனியன் நிபந்தனை வைத்ததின் பெயரில் அந்த சரத்து சேர்க்கப்பட்டது. இதுவரை அப்படித்தான் இருந்தது. தற்போது அமெரிக்கா தனக்குத்தானே ஒரு சட்டத்தை இயற்றி விண்வெளியில் ஆய்வை மேற்கொள்ளலாம் என்று அறிவித்தது. நிலவில் தனியார் விண்கலங்களும் செல்லலாம் என்று தனியார் மயம் ஆக்கியது. நிலவில் இருக்கும் தாதுப் பொருட்களை (குறிப்பாக ஹீலியம்) கொள்ளை அடிப்பதற்கான முயற்சிகளில் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய அரசுகள் முயற்சி செய்கின்றன. நிலவு வணிக மயத்திற்கும் தனியார் மயத்திற்கும் ஆளாகிறது.

னுநடழவைவந அறிக்கையின்படி, 2013லிருந்து 1,791 நிறுவனங்களில் 272 பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் தனியார் பங்கு மூலம் திரட்டப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் விண்வெளித் துறையை தனியாருக்கு தாரை வார்க்கும் நிலைமை இந்தியாவில் தாராளமாக நடக்கும். ஏற்கனவே அதற்கான முயற்சிகளை ஒன்றிய அரசு செய்திருக்கிறது.

இந்தியாவின் விண்வெளி ஆய்வு அமைப்பை துவங்குகிற பொழுது அதனுடைய நோக்கமாக விண்வெளி தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கும் நாட்டு நலன்களுக்கு பயன்படுத்துவதற்குமான முறையில் செயல்படுவோம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒன்றிய அரசின் செயல்பாடுகள் நாட்டு நலனை புறக்கணித்து தனியார்களின் வணிக மயத்தை நோக்கி தள்ளி விடுவதும் மக்கள் வஞ்சிக்கப்படுவதும் நடக்குமோ என்ற அச்சம் உருவாகியுள்ளது.

இந்திய விஞ்ஞானிகளின் சரித்திர சாதனையை நாட்டு மக்கள் அனைவரும் கொண்டாடும் அதே நேரத்தில் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு அறிவியல் துறையை ஏதாவது ஒரு வடிவத்தில் மூட நம்பிக்கை அமைப்புக்குள் திணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறது. விண்கலம் மாதிரிகளையும் ஏவுகணை மாதிரிகளையும் உருவாக்கி ஏழுமலையான் கோயிலுக்கு எடுத்துச் செல்லக்கூடிய செயல்களை எல்லாம் ஊக்குவிக்க கூடிய பணிகளும் நடைபெறுகிறது. எனவேதான் ஒன்றிய அரசின் மூட நம்பிக்கையில் இந்திய மக்களை மூழ்கடிப்பதற்காக எடுக்கக்கூடிய முயற்சிகளுக்கு எதிராக மிகப் பெரிய சவாலாகவும் வெற்றியாகவும் தான் சந்திரன்யான் விண்கலத்தில் பயணம் தொடங்கி இருக்கிறது. இது முற்போக்கு சக்திகளின் முன்னேற்றத்திற்கான பாதையாக அமைத்துக் கொள்ள வேண்டும்.


No One Beat
Our Price
List of works
* Fence
Timber fence
Colorbond fence
Aluminum slat and picket fence
Metal fence and auto gates
* decking
Merbau decking
Composite decking
* Landscaping
PROACTIVE RENOVATION SERVICES
Contact : 1800 960 162

"LANKA" ASTROLOGY CENTRE
PANDIT: ADI GURUKUL
MERCURY
APOLLO
SATURN
JUPITER
Heart Line
Head Line
Intuition
Fate Line
Life Line
Bracelets
வாழ்க்கையின் நம்பிக்கை
உங்கள் புதிய வாழ்க்கை,
புதிய நாளுக்கு ஹலோ சொல்லுங்கள்
உங்கள் புதிய மகிழ்ச்சியை
ஏற்றுக்கொள்ளுங்கள்
சூனியத்தை 100% அகற்றுவதற்காக,
துரதிர்ஷ்டம் மற்றும் தீய ஆவிகளிடமிருந்து
பாதுகாக்க நாடுங்கள்
விருப்பத்திற்குரியவற்றை
மீண்டும் அழைத்து வருவதில் வல்லுநர்
அனுபவம் வாய்ந்தவரின் கைரேகை பார்த்தல், முக வாசிப்பு, எண் கணிதம்,
புகைப்பட வாசிப்பு, ஜாதகம் மற்றும் அதிர்ஷ்ட எண்கள் பார்வை
அனைத்து பிரச்சினைக்கும் இங்கே தீர்வு உண்டு
ஆரோக்கிய பிரச்சினை
காதல் பிரச்சினை
உறவுமுறை
கல்விப் பிரச்சினை
தீய பார்வை
நிதி மற்றும் வியாபாரம்
தொழில் மற்றும் பணப்பிரச்சினை
பொறாமை, சாபம்
இருண்ட கனவு
திருமண பிரச்சினை
கணவன் - மனைவி
குழந்தயின்மை
விவாகரத்து
குடும்ப விவாதம்
பில்லி சூனியம்
எதிரிகள் போன்ற...
அனைத்து பிரச்சினைகளுக்கும்
இங்கே தீர்வு உண்டு
CALL FOR AN APPOINTMENT +61 426 954 355
Melbourne Victoria
Email : adithyasharma138@gmail.com
PRAVATE & CONFIDENTIAL

Mahaweli
Sri Lankan
Seafood Taste
from the Indian Ocean
FRESH FISH
WILD CAUGHT
Mahaweli
+61 404200150
www.mahaweli.com.au

NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Security Alarm
Data & Tele-communication
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco™ CARGO = # 1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

- ONLINE TRACKING
- SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
- LIVE CHAT ON WEBSITE
- TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road Dandenong South (03) 9703 2255
45 Adrian Rd Campbellfield (03) 9357 7228
SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU